# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2162 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்**

## பதவிகள் - வெற்றிடம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) பதவி (ஒப்பந்த அடிப்படையில்)

இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டவாக்க நிருவாக நடவடிக்கைகளை மென்மேலும் வினைத்திறனுடனும், பயனுறுதிமிக்கதாகவும் நிறைவேற்றிக் கொள்வதற்காக, பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியினரின் அறிவையும் திறமையையும் மேம்படுத்திக் கொள்ளக்கூடியவாறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் பணியாட்டொகுதியின் ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்வதற்கு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் அனைத்துவிதமான மனிதவள அபிவிருத்திச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக பாராளுமன்ற நிருவாகத் திணைக்களத்தின் கீழ் மனிதவள அபிவிருத்திப் பணியகம் ஒன்று தாபிக்கப்படவுள்ளது.

மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தாபிக்கப்படுகின்ற மனிதவள அபிவிருத்திப் பணியகத்தின் பிரதானியாக, உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) பதவிக்காக இரண்டு வருட காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக, சிறந்த தேகாரோக்கியமும், நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இங்கு காணப்படுகின்ற மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும். (இந்த அறிவித்தல் பற்றிய விபரங்களை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.)

**பதவிக்குரிய கடமைகளின் தன்மை மற்றும் பொறுப்புக்கள்.**- புதிய மனிதவள அபிவிருத்திப் பணியகத்தின் பிரதானி என்ற வகையில் மனித வள அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்தல், பணியாட்டொகுதியின் விசேட பயிற்சித் துறைகளை இனங்காணல், வளவாளர்களை இனங்காணல், பணியாட்டொகுதியை முறையாக அதில் ஈடுபடுத்த வேண்டியதன் தேவைகளை நிறைவேற்றுவதற்கான வருடாந்த பயிற்சித் திட்டத்தைத் தயாரித்தல், அதனை அமுல்படுத்தல் மற்றும் மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பில் பணியகத்தின் நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் நெறிப்படுத்தல் தொடர்பிலான முழுப் பொறுப்பையும் வகித்தல் வேண்டும்.

பணியாட்டொகுதி உறுப்பினர்களை செயலூக்குவிக்கும் நோக்கத்துடன் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட ஒரு திட்டத்தின் அடிப்படையில் சாதகமான சேவைசார் சூழலை கட்டியெழுப்பி அதனைப் பேணுதல், பொருத்தமான மனிதவளக் கொள்கைகளையும் மற்றும் நடவடிக்கைமுறைகளையும் கட்டியெழுப்புவதற்கு உதவுதல் மற்றும் அதற்கு தீவிரமாக இசைந்திருப்பதை உறுதிசெய்தல் ஆகிய விடயங்கள் இவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

1. **சம்பளம்**: ஒப்பந்த காலப்பகுதியில், ரூபா 125,000.00 மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தப்படும்.

2. **கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்.**- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டம் வழங்குகின்ற நிறுவனமொன்றினால் வழங்கப்படும் மனிதவள முகாமைத்துவம் பற்றிய பட்டத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்படி தகைமைகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் அரச ஒரு கூட்டுத்தாபனத்தில், ஒரு நியதிச்சட்ட சபையில் அல்லது தனியார் துறை நிறுவனமொன்றில் மனிதவள பிரதானி / மனித வள முகாமையாளர் பதவியொன்றில் பணியாற்றி ஆகக் குறைந்தது 05 வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

3. **வயதெல்லை** .- ஏற்புடையதல்ல.

4. **ஆட்சேர்ப்பு முறை.**- பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை மூலம் கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் விடயரீதியான அறிவு, துறைசார் அனுபவம், தொடர்பாடல் திறமைகள் மற்றும் ஆளுமை பற்றிய மீளாய்வின் ஊடாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

5. **சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்**:-

(i) தகுதிவாய்ந்த ஆளொருவரை ஒப்பந்த அடிப்படையில் இரண்டு வருட காலப்பகுதிக்கு ஆட்சேர்ப்பு செய்து கொள்வதற்கு பிரதானமாக எதிர்பார்க்கப்படுகின்றது. திணைக்களத்தினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களையும் செயலாற்றுகையையும் குறித்த காலப்பகுதிக்குள் அடைந்துகொள்வதன் பேரில் அக்காலப்பகுதியை நீடிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படும். தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர் நியமன அதிகாரியுடன் சேவை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் 07/2015 ஆம் இலக்க 2015.07.23 ஆம் திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு அமைய, ஒப்பந்த காலப்பகுதிக்குள் அரசாங்க சேவை ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். இதன் நிமித்தம் மாதாந்த கொடுப்பனவிலிருந்து 8 வீதத்தை அரசாங்க ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டும். இந்த நிதியத்திற்கு பாராளுமன்றம் 12 வீதத்தை செலுத்தும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு விடுவிப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

6. விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். கேட்கப்படும் பட்சத்தில் மாத்திரம் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(அ) பிறப்புப் சான்றிதழ்;
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிசெய்யும் சான்றிதழ்கள் ;
(இ) தொழில் தகைமைகளை உறுதிசெய்யும் சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவத்தை உறுதிசெய்யும் சான்றிதழ்கள்.

7. பதவியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் எவ்வகையிலேனும் செல்வாக்கைப் பிரயோகிப்பது பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யும்.

8. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானது என்பது ஒருவரை தெரிவு செய்ய முன்னர் கண்டறியப்பட்டால், அவர் தகுதியற்றவர் எனக் குறிப்பிடுவதற்கும், நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால், பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அல்லது மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

டபிள்யு. பி. டி. தசநாயக்க,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2020, பெப்புருவரி 07.

**இலங்கைப் பாராளுமன்றம்**

மாதிரி விண்ணப்பப் படிவம்

உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) பதவி (ஒப்பந்த அடிப்படையில்)

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்): ..........................................................................................
..........................................................................................
..........................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்): ..........................................................................................
..........................................................................................
..........................................................................................

(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) (Mr./Mrs./Miss):..........................................................................................
..........................................................................................

---

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ..........................................
03. (அ) தனிப்பட்ட முகவரி: ..........................................
தொலைபேசி இலக்கம்:-..........................................
(ஆ) அலுவலக முகவரி:-..........................................
..........................................
..........................................

தொலைபேசி இலக்கம்:-..........................................
(இ) (நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதத்தை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி)

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி:..........................................
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:
வருடங்கள்:----, மாதங்கள்:----, நாட்கள்:----.

05. விவாகமானவரா /விவாகமாகாதவரா என்ற விபரம்:-..........................................
06. பால்நிலை: (ஆண்/பெண்)
07. நீர் ஒரு இலங்கைப் பிரசையா எனும் விபரம்:- (ஆம்/இல்லை)
08. உயர் கல்வித் தகைமைகள்:- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| பட்டம் | பாடப் பிரிவு | பல்கலைக்கழகம் | ஆண்டு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

09. தொழில் தகைமைகள்:- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
..........................................
..........................................
..........................................

10. அனுபவம் :- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம்:-
(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :..........................................
..........................................
(ஆ) தற்போது வகிக்கும் பதவி: ..........................................
(இ) முதல் நியமனத் திகதி: ..........................................
(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம்: ..........................................
(உ) கொடுப்பனவுகள்: ..........................................
(ஊ) முழுமொத்த சம்பளம்: ..........................................

12. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கணிக்கப்பட்டுள்ளீரா? (ஆம்/இல்லை) அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
..........................................
..........................................

13.நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா? (ஆம்/இல்லை) அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக: ..........................................
..........................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் தவறானதென அல்லது பொய்யானதென நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இப்பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

..........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி: ..................

திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

(பொது கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம்,

இந்த நிறுவனத்தில்.......................................... பதவியை வகிக்கும் திரு./ திருமதி/செல்வி .......................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/நிரந்தரமாக்கப்படவில்லை. அவரின் வேலைகள் மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானவை என்றும், அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை என்றும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என்றும் உறுதிசெய்கின்றேன். அவர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படுவாராயின், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

..........................................
திணைக்கள /நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி :...................

02-150

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்காக இணைப்பு (ஆங்கிலம்) மொழிப் பரீட்சை - 2019

Link Language (English) Examination For Sri Lanka Teacher Educator's Service - 2019

இலக்கம் 1925/ 37 மற்றும் 2015, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான இணைப்பு (ஆங்கிலம்) மொழிப் பரீட்சை வைகாசி மாதம் கொழும்பில் நடைபெறும் என்பதை இத்தால் அறிவிக்கப்படும்.

02. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சகல உத்தியோகத்தர்களையும் சேர்த்துக்கொள்ளும் தினம் தொடக்கம் (3) வருட காலத்திற்குள் இணைப்பு மொழியான ஆங்கிலம் தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். உத்தியோகத்தர் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழிக்காக குறைந்தபட்சம் திறமைச் சித்தி அல்லது அதனைவிட மேற்பட்ட சித்தியினைப் பெற்றிருப்பின் அல்லது ஆங்கில மொழி மூலம் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பின் இவ் இணைப்பு (ஆங்கில) மொழிப் பரீட்சையில் சித்தியடையும் தேவையில் இருந்து விடுவிக்கப்படுவர். ஏனைய உத்தியோகத்தர்கள் இப்பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

3. இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் இலக்கம் 1925/ 37 கொண்ட 2015, யூலை மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் வசதிக்காக பாடதிட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

4. **பரீட்சை நடைமுறை.**- எழுத்துப் பரீட்சை

(அ) பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள்.- பாடவிதானம் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது :

| விடய இல. | விடயம் | புள்ளி | காலம் (மணி) |
|---|---|---|---|
| 01 | ஆங்கில மொழி | 100 | 02 |

5. **பாட விதானம்.**-

5.1 English Grammar

A suitable level of proficiency on the following form of grammar in the spoken and the written language is expected from the candidate.

- Tense and Number
- Sentences (Simple) Compound/Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives and Adverbs
- Deteminers
- Prepositions

5.2 Writing Skills

The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study.

- Essay Writing
- Summary writing skills
- Report writing skills
- Letter writing
- Reading skills

5.3 Candidate's ability to comprehend a printed text, infer meaning and written interpretation is expected.

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (written)

6. சித்தியடைவதற்காக இப்பாடத்திற்குப் பரீட்சார்த்தி ஒருவர் குறைந்தபட்சம் 40 புள்ளிகள் அல்லது அதனைவிட மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும்.

7. பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களினதும் பெறுபேறுகள் கொண்ட ஆவணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட பெறுபேறுகளை வழங்கும் செயற்பாடுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படமாட்டாது.

8. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய ஏ4 (A4) அளவுள்ள கடதாசியின் இரு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பப்படிவம் தலைப்பு இலக்கம் 01-04 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியது 2 ஆவது பக்கத்திலுமாக தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களைத் தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவதற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள் மற்றும் முழுமையற்ற தகவல்களை கொண்ட விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதால், விண்ணப்பப்படிவத்தை முன்னிலைப்படுத்துவதற்கு முன்னர் அதனை பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவானதாக சகல விடயங்களையும் உள்ளடக்கி சரியாக பூர்த்தி செய்யப்பட்டள்ளதா என்பதையும் உரிய பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்தி அதன் விபரங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளதா என்பதை பற்றியும் கவனிக்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளதாகும் என தெரிவிக்கின்றேன். அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை பெயரை சிங்கள மொழி விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட வேண்டும் என தெரிவிக்கின்றேன்.

9. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நடாத்துவதோடு அதனை நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்ட ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதற்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட்டவர்கள் ஆவர். பரீட்சைக்குரிய சட்ட ஒழுங்கு விதிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

10. தவறான விடயங்களை வழங்குதல்.- விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும் போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கமைய ஒரு விண்ணப்பதாரர் தகைமையற்றவர் என தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னதாகவோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சைக்குப் பின்போ விண்ணப்பதாரரின் எதிர்பார்ப்பை நிராகரிக்கப்படும்.

11. விண்ணப்பப்படிவங்கள் 2020.03.06 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503 கொழும்பு" என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பீடாதிபதி/ வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது தங்களது சேவைப் பொறுப்பாளர் ஊடாகப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அன்றைய தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

12. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் தினமன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் (உரியதாயின் மாத்திரம்) சரியாகப் பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.விண்ணப்பதாரிக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் தினமன்று குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு முன்னர் தமது அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அது தொடர்பில் பரீட்சைத் திணைக் களத்திற்கு அறிவிக்க வேண்டும்.

அவ்வாறு அறிவிக்கும்போது விண்ணப்பதாரர்களின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள பரீட்சார்த்தி ஆயின் அவ்விபரங்களுடன் அனுமதிப்பத்திரத்தின் பிரதியையும் தொலைநகல் இலக்கத்தையும் அனுப்பி வினவுவது மிகப் பொருத்தமானதாகும்.

பரீட்சைத் திணைக்களத்துடன் வினவப்படும் வேளையில் தேவைப்படும் பட்சத்தில் விண்ணப்பதாரியின் பரீட்சார்த்தி அந்தஸ்தினை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்துவது உரியதாயின் அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியையும் விண்ணப்பப்படிவத்தை தபாலிலிட்டபோது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக்கொண்டல்ல என்பதனைக் கருத்தில்கொள்ளக் கூடாது.

குறிப்பு.- மேலே 12 ஆவது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை நிவர்த்தி செய்யத் தவறும் பட்சத்தில் பரீட்சார்த்தியால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

13. விண்ணப்பப்படிவத்தில் மற்றும் பரீட்சை அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் இருத்தல் வேண்டும். தங்கள் கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

14. பரீட்சார்த்தி தமக்கு உத்தரவிடப்பட்ட பரீட்சை மண்டபத்தில் உரிய பரீட்சை இலக்கத்தின்கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சையின் முதலாவது திகதி தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி அனுமதிப்பத்திரத்தை மண்டபப் பொறுப்பாளருக்கு தமது கையொப்பத்தை அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். தமது அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

15. பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காக சாட்சிகளைச் சமர்ப்பிப்பது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். இதற்காக,

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

16. **பரீட்சைக் கட்டணம்** :

(அ) இப்பரீட்சைக்காக அறவிடப்பட்ட கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைக் கட்டணத்திற்கு மாற்றவும் இடமளிக்கப்பட மாட்டாது.

(ஆ) முதல் தடவைக்காக பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

(இ) அதற்குப் பின்னர் ஒவ்வொரு தடவைக்காகவும் 250 ரூபா அறவிடப்படும்.

பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இன்கீழ் அரச வருமானத் திற்கு வைப்பிலிடக்கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு தபாலகங்களிலும் நிதி செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராது ஒட்ட வேண்டும். மேலும் அதன் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

17. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிமுறைகளுக்குப் பரீட்சார்த்தி கட்டுப்பட வேண்டும். அச்சட்ட ஒழுங்கு விதிமுறைகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்பட வேண்டி ஏற்படும் என அறிவிக்கிறேன்.

18. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடற்ற நிலைமைகள் எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் சரியானது எனக் கருத்தில் கொள்ளப்படும்.

19. இவ்வறிவித்தல் மூலம் ஒழுங்குவிதி முறைகள் வழங்கப்படாத ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

என். எச். எம். சித்ரானந்த,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய", பெலவத்த,
2020, சனவரி 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்காக இணைப்பு (ஆங்கிலம்) மொழிப் பரீட்சை - 2019**

Link Language (English) Examination For Sri Lanka Teacher Educators Service - 2019

1. (i) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.
(உ+ம் HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) இறுதியில் வரும் பெயரை முதலிலும் மற்றைய பெயர்களின் முதலெழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உ+ம் : GUNAWARDHANA, H. M. S. K.)

(iii) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. (i) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் :----.
(ii) கல்வியியற் கல்லூரி/ ஆசிரியர் கல்லூரி/ ஆசிரியர் மத்திய நிலையம் :----.
(iii) வலயக் கல்வி அலுவலகம் :----. (ஆசிரியர் கல்லூரி/ ஆசிரியர் மத்திய நிலைய உத்தியோகத்தர்களுக்காக மாத்திரம்)

3. முகவரி :

(i) சொந்தம் :----.
(ii) அலுவலகம் :----.
(iii) அனுமதிப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iv) கடமைத் தொலைபேசி இலக்கம் :----.
(v) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :----.

4. (i) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

(ii) பிறந்த திகதி :

வருடம்: | | | | |   மாதம்: | | |   திகதி: | | |

(iii) பால் :

ஆண் - 0
பெண் - 1 | |
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்.)

5. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் விபரங்கள் :

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
தபால் அலுவலகம் :----.
திகதி :----.

பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.

6. மேற்கூறப்பட்ட தகவல்கள் சரியானதென தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7. பரீட்சை ஆணையாளர் நாயகம், மேற்கூறப்பட்ட விபரங்களைக் கொண்ட பரீட்சார்த்தி எனது கல்வியியற் கல்லூரியில்/ ஆசிரியர் கல்லூரியில்/ ஆசிரியர் மத்திய நிலையத்தின் உத்தியோகத்தர் என உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சார்த்தி பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச் சீட்டினைச் சரியாக ஒட்டியுள்ளதாகவும் உறுதிப் படுத்துகிறேன்.

----,
பீடாதிபதி/ ஆசிரியர் கல்லூரி அதிபர்கள்/
ஆசிரியர் மத்திய நிலைய முகாமையாளர்கள்/
வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.

திகதி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்.)
(உரியதல்லாத சொற்களை நீக்கவும்.)

02-205

---

**கல்வி அமைச்சு**

**அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு**

இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவையின்III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை –2019 (2020)

கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையங்களில் இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவை III ஆம் தரத்தில் காணப்படுகின்ற 706 வெற்றிடங்களை மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் மூலம் நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினது கல்விச் சேவைக்குழுவின் ஆணைப்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலின் இறுதியில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவை III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை -2019" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி : 2020.03.06

விண்ணப்பப்படிவமொன்று அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் பற்றி செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றி கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய நஷ்டங்களை விண்ணப்பதாரிகளினாலேயே ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

01. சேவையில் இணைத்துக் கொள்வதற்கான முறை

அ) எழுத்து மூலப் பரீட்சையினதும், பொது நேர் முகப் பரீட்சை, தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையினதும் மற்றும் செயன்முறைப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும், சித்தியெய்துவதற்குத் தேவையான 40% ஆன ஆகக் குறைவான புள்ளியைப் பெற்றவர்கள் மற்றும் இதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்களிடையே வெற்றிட எண்ணிக்கையைப்போன்று மூன்று மடங்கினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பொது நேர்முகப் பரீட்சையில் உரிய அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக் குழுவுக்கு வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு -01.-** எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைய தேவையான 40% ஆன ஆகக் குறைந்த புள்ளிகள் அல்லது அதற்கு கூடிய புள்ளிகளைப் பெறுவதன் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு கட்டாயம் அழைக்கப்படல் வேண்டும் என்று கருதக்கூடாது.

(அ) பொதுவான நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.
ஆட்சேர்ப்புக்காக பகிரங்கப்படுத்தப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளை சகல விதங்களிலும் பூர்த்தி செய்துள்ளாரா என இங்கு பரீட்சிக்கப்படும். பூர்த்தி செய்யாவிட்டால் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப்பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

(ஆ) தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன் முறைப் பரீட்சைக்கான புள்ளிவழங்கும் முறை இவ்வறிவித்தலின் அட்டவணை 5 மற்றும் 6 இன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் பொது நேர்முகப்பரீட்சை, தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப்பரீட்சை நடாத்தப்படும். எழுத்து மூலப்பரீட்சை,தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் கீழானதுமான செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்குத் தேவையான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளில் எழுத்துப் பரீட்சையிலும் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையிலும் பெற்றுக் கொண்ட புள்ளிகளது கூட்டுத்தொகையின் திறமை வரிசைப் படி வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.சம புள்ளிகள் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் ஒருவரைவிடக் கூடுதலாகக் காணப்படுவார்களாயின் அது தொடர்பான தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் எடுக்கப்படும். நியமனம் அமுலாகும் திகதி மற்றும் நியமிக்கப்படும் எண்ணிக்கை பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிட எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. எழுத்துப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம் பெறுவதோடு விண்ணப்பதாரிகளுக்கு தாம் விரும்பியதொரு மொழி மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலமே இணைத்துக் கொள்ளப்படுவர். சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்கின்ற பாடத்தின் மொழி மூலமே எழுத்துப் பரீட்சைக்குத்தோற்றி அதில் சித்தியடைதல் வேண்டும் என்பதோடு செயன்முறைப் பரீட்சையையும் அதே மொழி மூலமே மேற்கொள்ளல் வேண்டும். இந்த அறிவித்தலின் இலக்கம் 04 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகைமைகள் மற்றும் அனுபவம் விண்ணப்பிக்கின்ற மொழி மூலம் இருத்தல் அவசியமன்று.

(இ) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மூலம் பூரணப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உத்தேச வெற்றிட எண்ணிக்கைகள் அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வெற்றிடங்கள் தேசிய கல்வியியற்கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள் மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கானது என்பதோடு இவ்வெற்றிடங்கள் இணைத்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் வரிசையினை அடிப்படையாகக் கொண்டு பூர்த்தி செய்யப்படும். வெற்றிடங்கள் தேசிய கல்வியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்கள் என்பதாக காணப்படும் விதத்தினை அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு விண்ணப்பதாரி ஒரே மொழி மூலம் கீழே வெற்றிடங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் 03 இற்காக விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பதாரி பல பாடங்களுக்குத் தகைமை பெற்றால் அவர் தனது விண்ணப்பப்படிவத்தில் பாடங்களை விண்ணப்பித்துள்ள வரிசைப் பிரகாரம் இணைத்துக் கொள்ளும் பாடம் தீர்மானிக்கப்படும். அவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாட ஒழுங்கினை விண்ணப்பதாரி பின்னர் மாற்ற முடியாது.

அட்டவணை 01: இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இணைத்துக் கொள்ளல்

பாடங்கள் மற்றும் மொழியின் அடிப்படையில் வெற்றிட எண்ணிக்கை 2019.08.06 ஆந் திகதிக்கு

| தொ. இல. | பாடங்கள் | | மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சை | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் |
| 1 | தொழிற்பாடம் | | 111 | 47 | 19 | 177 |
| 2 | சிங்கள மொழி (தாய் மொழி) | | 44 | 0 | 0 | 44 |
| 3 | சிங்கள மொழி (இரண்டாம் மொழி) | | 34 | 0 | 0 | 34 |
| 4 | தமிழ் மொழி (தாய்மொழி) | | 0 | 17 | 0 | 17 |
| 5 | தமிழ் மொழி (இரண்டாம் மொழி) | | 0 | 66 | 0 | 66 |
| 6 | ஆங்கிலம் | | 0 | 0 | 88 | 88 |
| 7 | சுகாதாரமும், உடற் கல்வியும் | | 20 | 9 | 1 | 30 |
| 8 | நடனம் (கீழைத்தேய) | | 12 | 0 | 0 | 12 |
| 9 | நடனம் (பரதம்) | | 0 | 5 | 0 | 5 |
| 10 | சங்கீதம் (கீழைத்தேய) | | 10 | 0 | 0 | 10 |
| 11 | சங்கீதம் (கர்நாடகம்) | | 0 | 9 | 0 | 9 |
| 12 | மேலைத்தேய சங்கீதம் | | 0 | 0 | 3 | 3 |
| 13 | சித்திரம் | | 16 | 8 | 0 | 24 |
| 14 | நாடகமும், அரங்கியலும் | | 10 | 3 | 0 | 13 |
| 15 | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | | 6 | 5 | 5 | 16 |
| 16 | ஆரம்பக் கல்வி | | | | | |
| | 161 | தாய்மொழி | 3 | 4 | 0 | 7 |
| | 162 | அழகியற் கல்வியும் ஆக்கத்திறனும் | 8 | 8 | 0 | 16 |
| | 163 | உடற் கல்வி | 3 | 4 | 0 | 7 |
| | 164 | விசேட கல்வி | 1 | 1 | 0 | 2 |
| | 165 | ஆங்கிலம் | 0 | 0 | 10 | 10 |
| | 166 | விஞ்ஞானம் | 4 | 1 | 0 | 5 |
| | 167 | கணிதம் | 11 | 5 | 0 | 16 |
| | 168 | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 10 | 5 | 0 | 15 |
| | 169 | சமயம் | 4 | 2 | 0 | 6 |
| 17 | பௌத்த சமயம் | | 8 | 0 | 0 | 8 |
| 18 | கத்தோலிக்க சமயம் | | 2 | 1 | 0 | 3 |
| 19 | கிறிஸ்தவ சமயம் | | 2 | 1 | 0 | 3 |
| 20 | இந்து சமயம் | | 0 | 3 | 0 | 3 |
| 21 | இஸ்லாம் | | 0 | 3 | 0 | 3 |
| 22 | கணிதம் | | 2 | 1 | 3 | 6 |
| 23 | உயிரியல் | | 2 | 1 | 1 | 4 |
| 24 | இரசாயனவியல் | | 1 | 1 | 1 | 3 |
| 25 | பௌதீகவியல் | | 2 | 0 | 1 | 3 |
| 26 | இயந்திரவியல் தொழில்நுட்பம் | | 0 | 1 | 0 | 1 |
| 27 | நிர்மாணத்துறைத் தொழில்நுட்பம் | | 1 | 0 | 0 | 1 |
| 28 | மின்சார, இலத்திரனியல் தொழில்நுட்பம் | | 0 | 1 | 0 | 1 |
| 29 | நுண்கலை (மட்பாண்டமும் கைப்பணிக் கைத்தொழிலும்) | | 1 | 1 | 0 | 2 |
| 30 | குடியுரிமைக் கல்வி | | 4 | 4 | 1 | 9 |
| 31 | வரலாறு | | 2 | 1 | 0 | 3 |
| 32 | புவியியல் | | 1 | 1 | 0 | 2 |
| 33 | விவசாய விஞ்ஞானம் | | 1 | 1 | 0 | 2 |
| 34 | விசேட கல்வி | | 1 | 4 | 0 | 5 |
| 35 | மனைப் பொருளியல் | | 1 | 5 | 0 | 6 |
| 36 | தொழில் முயற்சிக் கல்வி | | 1 | 1 | 0 | 2 |
| 37 | முகாமைத்துவக் கல்வி | | 1 | 3 | 0 | 4 |
| | மொத்தம் | | 340 | 233 | 133 | 706 |

அட்டவணை 02: தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை மற்றும் ஆசிரியர் நிலையங்களில் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III தரத்தில் 2019.08.06 ஆம் திகதிக்கு வெற்றிடங்கள் காணப்படும் விதம்.

| | மட்டுப்படுத்தப்பட்ட | | | |
|---|---|---|---|---|
| நிறுவனம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் |
| தேசிய கல்வியியற் கல்லூரி | 139 | 80 | 34 | 253 |
| ஆசிரியர் நிலையம் | 156 | 97 | 64 | 317 |
| ஆசிரியர் கலாசாலை | 45 | 56 | 35 | 136 |
| மொத்தம் | 340 | 233 | 133 | 706 |

02. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :-**

I. இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் இலக்கம் 1925/37 மற்றும் 2015.07.28 ஆந்திகதி கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மற்றும் இலக்கம் 2141/73 கொண்ட 2019/09/19 ஆந் திகதிய இலக்கம் 2153/06 கொண்ட 2019.12.09 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அந்த பிரமாணக்குறிப்பிற்கு இதன் பிறகு மேற்கொள்ளப்படக்கூடிய திருத்தங்களுக்கும் அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்துகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும் கீழ்ப்படிந்து தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் சேவையின் III ஆம் தரத்துக்கு நியமிக்கப்படுவர்.

II. இப்பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் ஒருவருடகாலம் பதிற்கடமை காலத்திற்கு உட்பட்டவர் ஆவார்.

III. ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்டு (03) மூன்று வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன் தடைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

IV. அரசாங்க நிர்வாக சுற்று நிருப இல 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்று நிருபத்தின் பிரகாரம் குறித்த ஏனைய அரசகரும மொழி பற்றிய உரிய தேர்ச்சி மட்டத்தை நியமனத் திகதியில் இருந்து 05 (ஐந்து) வருடங்களுக்குள் பெற்றிருத்தல் வேண்டும். அரச கரும மொழி அல்லாத மொழி ஒன்றின் மூலம் சேவைக்கு இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் 03 (மூன்று) வருடங்களுக்குள் ஒரு அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியை பெற்றிருக்க வேண்டியதோடு சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தரொருவர் இணைத்துக் கொள்ளப்படும் திகதியில் இருந்து 03 (மூன்று) வருடத்திற்குள் இணைப்பு மொழியான ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். உத்தியோகத்தரொருவர் கா.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி அல்லது அதை விடக்கூடியதாக சித்தியடைந்து இருப்பின் இணைப்பு மொழிச் சித்தியடையும் தேவையில் இருந்து விடுவிக்கப்படுவார். ஏனைய உத்தியோகத்தர்கள் சேவைப் பிரமாணத்தின் உப அட்டவணை“VIII” இல் குறிப்பிடப்பட்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். ஆங்கில மொழி மூலம் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் இத்தேவையில் இருந்து விடுவிக்கப்படுவார்.

V. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவைப்பிரமாணம் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகும்.

VI. வதிவிட வசதிகள் வழங்கப்பட்டிருப்பின் கல்விக்கல்லூரி எல்லைக்குள் வசித்தல் வேண்டும், வதிவிட வசதி இல்லாத போது மட்டுப்படுத்தப்பட்ட தூரத்தில் வசிக்க அனுமதி வழங்கப்படும். எனினும் கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை அல்லது ஆசிரியர் நிலைய எல்லையில் வீட்டுவசதி வழங்கப்பட்டிருப்பின் அங்கு வசித்தல் வேண்டும்.

VII. தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை அல்லது ஆசிரியர் நிலையங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதோடு ஆட்சேர்ப்புச் செய்யும் பரீட்சையின் திறமை அடிப்படையில் பதவி நிலைப்படுத்தப்படும் கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை அல்லது ஆசிரியர் நிலையத்தில் சேவையாற்ற இணங்குதல் வேண்டும்.

03. **சம்பள அளவுத்திட்டம்.-** இப்பதவிக்கு அரசாங்க சுற்றுநிருப இல. 03/2016 கொண்ட சம்பள சுற்றுநிருபத்தின் பிரகாரம் SL-01-2016 இன் ரூபா 47,615.00 -10×1,335-8×1,630-17×2,170- ரூபா 110,895.00 (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்துடையதாகும்.

04. **தகைமைகள் மற்றும் அனுபவம்.-**

I. பொதுவான தகைமைகள் :

i. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

ii. இலங்கைக் கல்வி நிர்வாக சேவையிலோ அல்லது அதிபர் சேவையிலோ அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவையிலோ பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

iii. இலங்கைக் கல்வி நிர்வாக சேவையிலோ அல்லது அதிபர் சேவையிலோ அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவையில் அண்மித்த வருடங்களினுள் அல்லது இணைந்த சேவைக்காலத்தினுள் சகல சம்பள ஏற்றங்களையும் குறித்த திகதியில் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அக்காலத்தினுள் ஒழுக்காற்று தண்டனைகள் பெற்றிராதிருத்தல் வேண்டும்.

iv. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்காக மூன்று (03) தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு யாருக்கும் அனுமதி இல்லை.

v. தகைமை பெறும் திகதி – சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்படுவது, விண்ணப்பதாரி 04 தொடக்கம் 06 வரை குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் சகல விதங்களிலும் பூரணப்படுத்தியிருத்தால் மாத்திரமே ஆகும்.

II. **கல்வித் தகைமைகள் .-**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து கீழ்க் குறிப்பிடப்படும் ஒரு தகைமையைப் பெற்றிருத்தல்.

i. குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் பெற்றுக்கொண்ட வகுப்புச் சித்தியுடன் கூடிய அடிப்படைப் பட்டமொன்று
ii. குறித்துரைக்கப்பட்ட பாடத்தின் அடிப்படைப் பட்டத்துடன் அப்பாடத்துக்குரிய பட்டப்பின் பட்டமொன்று
iii. குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் அடிப்படைப் பட்டத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவொன்று அல்லது குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் பெற்றுக் கொண்ட பட்டப்பின் கல்வி டிப்ளோமாவொன்று.
iv. குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் கல்வியியல் பட்டமொன்று
v. குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் அடிப்படைப் பட்டத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின்பட்டமொன்று

***குறிப்பு.- 02***

தொழிற் பாடத்துக்கு மாத்திரம் எந்த பாடப்பரப்பினதும் அடிப்படை பட்டத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டமொன்று கவனத்தில் கொள்ளப்படும்.

vi. இலக்கம்1925/ 37மற்றும் 2015.07.28 ஆந் திகதிய சேவைப்பிரமாணத்தினது அட்டவணை 07 மற்றும் அதற்கு இலக்கம் 2141/ 73 கொண்ட 2019.09.19 ஆந் திகதிய மற்றும் 2153/06 கொண்ட 2019.12.09 ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானப் பத்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் குறிப்பு 05 இன் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு, கீழ் குறிப்பிடப்படும் பாடங்கள் தொடர்பாக அங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த தகைமை மாற்றுத் தகைமையாகக் கருதப்படும்.

(அ) விஷேட கல்வி.-

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விஷேட கல்விப் பாடத்துடன் கூடிய பட்டப்பின் பட்டத்துடன் முழு நேரமாக 5 வருடங்கள் உரிய பாடப்பரப்பில் கற்பித்தல் அனுபவம்;அல்லது
(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பட்டமொன்றுடன் குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் பெற்றுக்கொண்ட பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது விஷேட கல்வி பற்றிய தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது விஷேட கல்வி பற்றிய ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் முழு நேரமாக 6 வருட கற்பித்தல் அனுபவம்; அல்லது
(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து குறித்துரைக்கப்பட்ட பாடம் தொடர்பான பட்டமொன்று மற்றும் குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் முழுநேரமாக 7 வருடங்கள் கற்பித்தல் அனுபவம்; அல்லது
(iv) விஷேட கல்வி பற்றிய தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் முழு நேரமாக 7 வருடங்கள் கற்பித்தல் அனுபவம் இருத்தல்.

(ஆ) தகவல் தொழில் நுட்பம்

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தகவல் தொழில் நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம்/ கணினி விஞ்ஞானம் தொடர்பாக முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்; அல்லது
(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தகவல் தொழில் நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம்/ கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்று மற்றும் குறித்துரைக்கப்பட்ட பாடப்பரப்பில் பட்டப்பின் பட்டமொன்று பெற்றிருத்தல்; அல்லது
(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தகவல் தொழில் நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம்/ கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றோ அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தை பிரதான பாடமாகக் கற்று பெற்றுக்கொண்ட பட்டத்துடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப பட்டப்பின் பட்டமொன்றுடன் தகவல் மற்றும் தொடர்பாடல் பாடத்தினை கற்பித்தல் தொடர்பான 5 வருடத்திற்கு குறையாத தொடர்ச்சியான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்திருத்தல்; அல்லது.
(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தகவல் தொழில் நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம்/ கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்று அல்லது தகவல் தொழில் நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம்/ கணினி விஞ்ஞானத்தை பிரதான பாடமாகக் கற்று பெற்றுக் கொண்ட பட்டமொன்றுடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப தேசிய போதனாவியல் டிப்ளோமா சான்றிதழுடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப பாட கற்பித்தலில் 5 வருடத்திற்கு குறையாத தொடர்ச்சியான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்; அல்லது.
(v) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏதாவது ஒரு பாடப்பரப்பின் கீழ் பெற்றுக் கொண்ட பட்டமொன்றுடன் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பப் பாட பட்டப்பின் டிப்ளோமாவொன்றுடன் தகவல் மற்றும் தொடர்பாடல் பாட கற்பித்தலில் 6 வருடங்கள் தொடர்ச்சியான சேவைக்காலத்தினை பூர்த்தி செய்திருத்தல்; அல்லது.
(vi) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தகவல் தொழில் நுட்பம்/ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம்/ கணினி விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றுடன் 7 வருடங்களுக்குக் குறையாத தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப பாட கற்பித்தல் அனுபவம் இருத்தல்.

(இ) மேலைத்தேய சங்கீதம்

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து குறித்துரைக்கப்பட்ட பாடப்பரப்பில் பெற்றுக்கொண்ட பட்டமொன்றுடன் 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்; அல்லது
(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பட்டமொன்றுடன் குறித்துரைக்கப்பட்ட பாடப்பரப்பில் தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் 7 வருடத்திற்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் ; அல்லது
(iii) மேலைத்தேய சங்கீத பாடப்பரப்பில் இருந்து பெற்றுக் கொண்ட தேசிய போதனாவியல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் குறித்த பயிற்சியின் பின்பு 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்; அல்லது.
(iv) இலங்கைப் பரீட்சைத்திணைக்கத்தினால் நடாத்தப்படுகின்ற குறித்த பாடம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழுடன் 10 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்; அல்லது
(v) கீழ்க் குறிப்பிடப்படும் நிறுவனமொன்றிலிருந்து மேலைத்தேய சங்கீதம் viii ஆம் தர பிரயோக மற்றும் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதுடன் 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் இருத்தல்.

(ய) Department of Examinations, Sri Lanka
(டி) Trinity College of Music, London
(உ) Royal School of Music, London
(ன) London College of Music
(ந) Institute of Western Music and Speech, Colombo

(ஈ) ஆங்கிலம்

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றுடன் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பாக பட்டப்பின் டிப்ளோமாவுடன் 6 வருட கற்பித்தல் அனுபவம்; அல்லது
(ii) ஆங்கிலம் தொடர்பாக தேசிய கற்பித்தல் டிப்ளோமா சான்றிதழ் அல்லது ஆங்கில ஆசிரிய பயிற்சிச் சான்றிதழுடன் ஆசிரிய பயிற்சியின் பின்னர் 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் காணப்படல்.

(உ) உடற்கல்வி

(i) உடற்கல்வி தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டமொன்றுடன் 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்; அல்லது
(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது விளையாட்டு அமைச்சின் மூலம் பெற்றுக்கொண்ட உடற்கல்வி மற்றும் விளையாட்டு தொடர்பான தேசிய கற்பித்தல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் பயிற்சியின் பின்னர் 6 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்; அல்லது
(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏதாவது ஒரு பாடப்பரப்பில் பட்டமொன்றுடன் உடற்கல்வி தொடர்பாக பட்டப்பின் பட்டத்துடன் 6 வருடங்கள் உடற்கல்வி கற்பித்தல் அனுபவம் காணப்படல்; அல்லது.
(iv) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஏதாவது பாடப்பரப்பொன்றில் பட்டத்துடன் சுகாதாரம் மற்றும் உடற்கல்விப் பாடம் தொடர்பாக தேசிய கற்பித்தல் டிப்ளோமா சான்றிதழ் அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்று6 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் காணப்படல்.

(ஊ) தொழில் நுட்பப் பாடங்கள்

i. நிர்மாணத் தொழில்நுட்பம்
ii. இயந்திர தொழில்நுட்பம்
iii. நுண்கலை
iv. மின்சாரம் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பம்
v. மனைப்பொருளியல்

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உரிய பாடப்பரப்பு தொடர்பாக பெற்றுக்கொண்ட பட்டமொன்றுடன் 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்; அல்லது
(ii) உரிய பாடத்தில் தேசிய கற்பித்தல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் 7 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்; அல்லது
(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட பட்டமொன்றுடன் உரிய பாடம் தொடர்பாக தேசிய கற்பித்தல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் 6 வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம்; அல்லது
(iv) உரிய பாடம் தொடர்பாக தேசிய கற்பித்தல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் 6 வருடங்களுக்குக் குறையாத உரிய பாடக்கற்பித்தல் அனுபவத்துடன் உரிய பாடப்பரப்புக்குரிய கீழ் குறிப்பிடப்படும் ஏதாவது சான்றிதழொன்று காணப்படல்.

(a) தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா அல்லது தொழில்நுட்பம் தொடர்பான உயர் தேசிய சான்றிதழ்
(b) தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா அல்லது தொழில்நுட்பம் தொடர்பான தேசிய சான்றிதழ்
(c) அரச தொழில்நுட்பக்கல்லூரியொன்றிருந்தோ அல்லது பல்தொழில்நுட்ப நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வருடத்துக்குச் குறையாத கால டிப்ளோமா சான்றிதழ்
(d) சிடி என்ட் கில்ட்ஸ் I,IIஅல்லது III சான்றிதழ்
(e) NVQ -Vமட்டத்திலான தொழில்நுட்ப சான்றிதழ்

(எ) ஆரம்பக்கல்விப் பாடங்கள்

ஏதாவது அடிப்படை பட்டத்துடன் குறித்துரைக்கப்பட்ட உரிய பாடத்துறையில் தேசிய கற்பித்தல் டிப்ளோமா அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழுடன் குறித்துரைக்கப்பட்ட உரிய பாடத்துறையில் 7 வருடங்கள் கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல்.

***குறிப்பு 03*** - குறித்துரைக்கப்பட்ட பாடம் என்பது 1925/37மற்றும் 2015.07.28ஆம் திகதிய சேவைப்பிரமாணத்தினதும் இலக்கம் 2141/ 73மற்றும் 2019.09.19ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானப் பத்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் ஆகும்.

***குறிப்பு 04***- விண்ணப்பிக்கின்ற பாடத்துறையை பிரதான பாடங்களில் ஒன்றாக பட்டப்படிப்பிற்கு கற்றிருத்தல் கட்டாயம் என்பதோடு பட்டத்துக்காக கற்கின்ற பிரதான பாடம் மொத்த பாடப்பிரிவுகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றாவது (1/3) விண்ணப்பிக்கின்ற பாடத்துக்குரிய பாடமாக இருத்தல் வேண்டும். அது பற்றி பட்டத்திற்குரிய பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு அவ்வுறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழை நேர்முகப்பரீட்சையின் சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழிற்றகைமைகளைப் பெற்றுள்ளமை வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ்களின் அடிப்படையில் எனின், அப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றாகும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து

பெறப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழொன்றை பொதுநேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் கட்டாயமாகும். மேற்படி உறுதிப்படுத்தும் சான்றிதழை விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சை சந்தர்ப்பத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு பின்னர் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

**குறிப்பு 05** - சேவைப்பிரமாணத்தின் அட்டவணை VII இல் குறிப்பிடப்பட்டுள்ள இந்த குறைந்த பட்ச தகைமைகளின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதியில் இருந்து 05 வருடங்களினுள் தாம் இணைத்துக்கொள்ளப்பட்ட பாடத்துக்கு ஏற்புடையதாக சேவைப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத்தகைமைகளை பூர்த்தி செய்து கொள்ளத் தவறுகின்ற உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்றத்தை வழங்குவது தகைமைகளைப் பூர்த்தி செய்யும் வரை நிறுத்தப்படும். அவ்வுத்தியோகத்தர்களின் தரம் II இற்குரிய பதவியுயர்வு தகைமைகளை பூர்த்தி செய்வதற்கு எடுக்கப்படுகின்ற காலத்திற்கு சமமான காலத்தினால் தாமதப்படுத்தப்படும்.

III அனுபவம் :

விண்ணப்பம் கோரப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மேற்படி இந்த அறிவித்தலின் இலக்கம் 04 I மற்றும் II இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையும் அரசின் அல்லது மாகாண அரசாங்க சேவைக்குரிய இலங்கை ஆசிரிய சேவையில், அல்லது இலங்கை அதிபர் சேவையில் அல்லது இலங்கைச் கல்வி நிர்வாக சேவையில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத தொரடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்ததைப் பூர்த்தி செய்து, நியமனம் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரியாக இருத்தல்.

05. **வயதெல்லை.**- விண்ணப்பம் கோரப்படும் இறுதித்திகதிக்கு வயது 45 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல். "அதன் பிரகாரம் 1975.03.06 ஆந் திகதி அல்லது அதற்குப்பின்னர் பிறந்த தினத்தை கொண்டுள்ளவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க தகுதி உண்டு"

**குறிப்பு 06.**- இச்சந்தர்ப்பத்தில் மாத்திரம் விண்ணப்பம் கோரப்படும் இறுதித்திகதிக்கு தேசிய கல்வியியற்கல்லூரி, ஆசிரியர் கலாசாலைகளில் கடமை நிமித்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற தொடர்ச்சியானதும் திருப்திகரமானதுமான 03 வருட சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள இணைப்புச் செய்யப்பட்ட விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரியர் நிலைய முகாமைத்துவ பதவிகளில் பதிற்கடமையில் அமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச வயதெல்லையைக் கவனிக்காது விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் உரித்தாகும்.

06. **உடற் தகைமைகள்** .- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கும், பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உளத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

07. **விண்ணப்பிக்கும் முறை.**- சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கு அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ஒரு விண்ணப்பதாரிக்கு 3 பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடிவதோடு விண்ணப்பிக்கின்ற பாடங்கள் மற்றும் அதற்குரிய பாடஇலக்கங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட இடத்தில் சரியாக குறிப்பிடுதல் கட்டாயமாகும். அரசாங்க சேவைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் அரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தல் மற்றும் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுவதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

அட்டவணை 03 : சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் பாடங்களும் உரிய பாடத்துக்கான இலக்கங்களும்

| பாடப்பரப்பு | பாடஇலக்கம் |
|---|---|
| தொழில்சார் பாடங்கள் | 01 |
| சிங்கள மொழி (தாய் மொழி) | 02 |
| சிங்கள மொழி (இரண்டாம் மொழி) | 03 |
| தமிழ் மொழி (தாய்மொழி) | 04 |
| தமிழ் மொழி (இரண்டாம் மொழி) | 05 |
| ஆங்கிலம் | 06 |
| சுகாதாரமும், உடற் கல்வியும் | 07 |
| நடனம் (கீழைத்தேய) | 08 |
| நடனம் (பரதம்) | 09 |
| சங்கீதம் (கீழைத்தேய) | 10 |
| சங்கீதம் (கர்நாடகம்) | 11 |
| மேலைத்தேய சங்கீதம் | 12 |
| சித்திரம் | 13 |
| நாடகமும், அரங்கியலும் | 14 |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | 15 |
| ஆரம்பக் கல்வி (தாய்மொழி) | 161 |
| ஆரம்பக் கல்வி (அழகியற் கல்வியும் ஆக்கத்திறனும்) | 162 |
| ஆரம்பக் கல்வி (உடற் கல்வி) | 163 |
| ஆரம்பக் கல்வி (விசேட கல்வி) | 164 |
| ஆரம்பக் கல்வி (ஆங்கிலம்) | 165 |
| ஆரம்பக் கல்வி (விஞ்ஞானம்) | 166 |
| ஆரம்பக் கல்வி (கணிதம்) | 167 |
| ஆரம்பக் கல்வி (சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்) | 168 |
| ஆரம்பக் கல்வி (சமயம்) | 169 |
| பௌத்த சமயம் | 17 |
| கத்தோலிக்க சமயம் | 18 |
| கிறிஸ்தவ சமயம் | 19 |
| இந்து சமயம் | 20 |
| இஸ்லாம் | 21 |
| கணிதம் | 22 |
| உயிரியல் | 23 |
| இரசாயனவியல் | 24 |
| பௌதீகவியல் | 25 |
| இயந்திரவியல் தொழில்நுட்பம் | 26 |
| நிர்மாணத்துறைத் தொழில்நுட்பம் | 27 |
| மின்சார, இலத்திரனியல் தொழில்நுட்பம் | 28 |
| நுண்கலை (மட் பாண்டமும் கைப்பணிக் கைத்தொழிலும்) | 29 |
| குடியுரிமைக் கல்வி | 30 |
| வரலாறு | 31 |
| புவியியல் | 32 |
| விவசாய விஞ்ஞானம் | 33 |
| விசேட கல்வி | 34 |
| மனைப் பொருளியல் | 35 |
| முயற்சியாண்மைக் கல்வி | 36 |
| முகாமைத்துவக் கல்வி | 37 |

08. **ஆட்சேர்ப்பு**

8.1 எழுத்துப்பரீட்சை

8.1.1 இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும்.

8.1.2 பாடத்திட்டம் : அட்டவணை 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் மூன்றின் கீழ் இப் பரீட்சை நடாத்தப்படும் பொது நேர்முகப் பரீட்சைக்காக தகைமை பெறுவது சகல வினாப்பத்திரங்களிலும் குறைந்த பட்சமாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சையில் காட்டுகின்ற திறமையின் அடிப்படையில் காணப்படுகின்ற வெற்றிட எண்ணிக்கையைப் போன்று மும்மடங்கினர் மாத்திரமே ஆகும். போட்டிப் பரீட்சையில் எல்லாப் பாடங்களுக்கும் சித்தியடைவதற்குத் தேவையான 40% குறைந்த பட்ச புள்ளிகளைப் பெறுவதை நேர்முகப்பரீட்சைக்கு கட்டாயமாக அழைக்கப்படுவதற்கான தகைமையொன்றாக இதன் மூலம் கருதப்படமாட்டாது.

அட்டவணை 04 : பாடத்திட்டம்

| தொடர் இலக் கம் | பாடம் | பாடத்திட்டம் | காலம் | உச்ச புள்ளி | சித்திய டைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவும் கிரகித்தலும் | வழங்கப்பட்ட தலைப்பு/ கருப்பொருளின் ஊடாக கருத்துக்கள் மற்றும் தகவல்களை சமர்ப்பித்தல், கோவைப்படுத்தல் மற்றும் ஒலிபரப்புச் செய்தல் தொடர்பாக விண்ணப்பதாரி காட்டுகின்ற தர்க்க ரீதியான கற்பனைத் திறனை அள விடுதல் மற்றும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, ஆவணமொன்றை அல்லது விஞ்ஞாபனமொன்றை புரிந்து கொள்வதற்கும் அதிலுள்ள பிரதான கருத்துக்களை தமது நடையில் சாராம்ச மாக தெளிவாகவும் சரியாகவும் வெளிப்படுத்தவும் வழங்கப்பட்டுள்ள வகுதிக்கேற்ப தெரிவு செய்வதற்கு விண்ணப்பதாரிக்கு உள்ள திறனை அள விடுதல், கிரகித்தல் மற்றும் நிலைப் படுத்தல் எண்மற்றும் உருவவியல் சூழலில் சமர்ப்பிக்கப்படுகின்ற முரண் பாடுகள் தொடர்பாக விண்ணப்பதாரி களின் முடிவுகளையும் பதிலையும் பரீட்சிப்பதனூ டாக விண்ணப்பதாரிக ளின் கிரகிக்கும் ஆற்றலையும் நுண்ணறி வையும் அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 02 | விடய ஆய்வு | ஆசிரியர் கல்வி மற்றும் பாடசாலைகள் கல்வித் துறையினுள் ஏற்படக்கூடியதான நிகழுவுகள் பல சமர்ப்பிக்கப்பட்டு அந்நிகழ்வுகளுக்கு பதில்வழங்குதல் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் திறனை அளவிடும் நோக்கில் வினாக்கள் தரப்படும். | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 03 | கல்வி மூலதத் துவங்கள் | கல்வித் தத்துவம், கல்வி சமூகவியல், ஆசிரியர் வகிபாகம்,கல்விக் கொள்கை மற்றும் நவீன முரண்பாடுகள், கல்வி திட்டமிடல் மற்றும் முகாமைத் துவம், கல்வி மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் நுணுக்கங்கள்கல்வித் தொழில் நுட்பவியல் மற்றும் கல்வி ஆய்வு ஆகிய துறைகளுக்கு ஏற்புடையதாக விண்ணப்பதாரிகளின் கிரகித்தல் திறன் இதன் மூலம் பரீட்சிக்கப்படும் | 02 மணித்தியாலம் | 100 | 40 |

**8.2 பொது நேர்முகப் பரீட்சை**

(அ) எழுத்துப்பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் வெற்றிட எண்ணிக்கையைப் போன்ற மும்மடங்கு விண்ணப்பதாரிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சைக் குழுவினால் இந்நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

(ஆ) இதற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(இ) மேற்படி (அ) இன்படி தகைமை பெறும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடம் காணப்படுகின்ற தொகையின் மும்மடங்கு எண்ணிக்கை அளவு இல்லாத சந்தர்ப்பத்தில் பொது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவது அவ்வாறு தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே ஆகும்.

8.3 தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறை நேர்முகப்பரீட்சை

தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

பொது நேர்முகப்பரீட்சையின் போது அடிப்படை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்கள் என அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் இந்த தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(அ) இந்த நேர்முகப்பரீட்சைக்கு கீழே அட்டவணை 5 இன் நியதிகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

(ஆ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவொன்று மற்றும் விரிவான புள்ளித்திட்டத்தின் பிரகாரம் இப்பரீட்சை நடாத்தப்படும் (இவ்வறிவித்தலின் உப அட்டவணை I மற்றும் உபஅட்டவணை II)

அட்டவணை 05 – தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை நேர்முகப்பரீட்சை – புள்ளி வழங்கும் நியதிகள்

| புள்ளி வழங்கும் நியதிகள் | உச்ச புள்ளி களின் அளவு | சித்தியடைந்துள்ள புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித்தகைமைகள் | 20 | பொருத்தமற்றது |
| 2. ஆங்கில மொழித்தேர்ச்சி | 15 | |
| 3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன் | 15 | |
| மொத்தப்புள்ளிகள் | 50 | |

II. **செயன்முறை பரீட்சை**

(அ) பொது நேர்முகப்பரீட்சையில் அடிப்படைத்தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் செயன்முறைப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சைக்குழுவொன்றினால் இது நடாத்தப்படும்.

**அட்டவணை - 06**

செயன்முறைப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படும் நியதிகள்

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்ச புள்ளி களின் அளவு | தெரிவு செய்யப்படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த பட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. பாடக்குறிப்பு தயாரித்தல் | 20 | 20 |
| 2. முன்வைப்பு | 30 | |
| 2.1 நுழைவு | 04 | |
| 2.2 பாடத்திட்டத்தின் விடயங்களை சுருக்கமாக முன்வைத்தல் | 04 | |
| 2.3 முன்வைக்கும் பாங்கு | 08 | |
| 2.4 விடய உள்ளடக்கம் | 10 | |
| 2.5 நேர முகாமைத்துவம் | 04 | |
| **மொத்தம்** | **50** | |

**குறிப்பு 08** - பொது நேர்முகப்பரீட்சையின் போது ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறுவர். மேலே கூறப்பட்டவாறு பொது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளிடையே ஒரு தொகையினர் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறாவிட்டாலும் அவ்வாறு தகைமை பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரிகள் மீண்டும் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

9. **பரீட்சை நிபந்தனைகள்**.-

(I) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் பாடத்தின் மொழி மூலமே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலமே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பதாரியொருவருக்கு சொந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற மொழிமூலத்தை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

(II) பரீட்சைக்கட்டணம் 1200 ரூபா ஆகும். பரீட்சைக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபாலகத்திலோ அல்லது மாவட்ட, பிரதேச செயலகங்களிலோ செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டின் ஓரத்தை விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டுக. அப்பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்மிடம் வைத்துக் கொள்ளல் பயனளிக்கும்.

(III) பரீட்சைக்குச் செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளஅளிக்கப்படமாட்டாது.

(IV) இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(V) பூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு** .- அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்தில் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில் பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியது தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி பெறப்பட்ட அனுமதி அட்டையை மாத்திரமாகும்.

விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொள்வதாக கருத முடியாது.

(VI) விண்ணப்பப்படிவம் A4 அளவு கடதாசியில் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டியதோடு 01 தொடக்கம் 04 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் 05 தொடக்கம் அடுத்த தலைப்புக்கள் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது பக்கங்களில் வருமாறு தயாரித்தல் வேண்டும். உரிய தகவல்களை தமது கையொழுத்தினாலேயே தெளிவாகப் பூரணப்படுத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அல்லாத விண்ணப்பப்படிவங்கள், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியொன்றை தம்மிடம் வைத்துக் கொள்வது பயனளிக்கும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என்பது பற்றி விண்ணப்பதாரியினால் விசாரித்தறியப்படல் வேண்டும் என்பதோடு அவ்வாறில்லாது விடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் அறிவிக்கின்றேன்.

விண்ணப்பப்படிவங்களிலும் பரீட்சை அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கின்ற சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தினை நிறுவனத்தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதோடு பரீட்சைக்குத்தோற்றுகின்ற முதல் நாளிலேயே பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(VII) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் என்ற முன் முடிவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லைக்குள்ளான விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக்கட்டணம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம் விண்ணப்பிக்கின்ற பாடம் மற்றும் குறியீட்டு இலக்கம், விண்ணப்ப தாரியின் கையொப்பம், அதிபரின் உறுதிப்படுத்தல் மற்றும் வலய கல்விப்பணிப்பாளர்/ மாகாண கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

பரீட்சைஅனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட உடனே அது பற்றிக் குறிப்பிட்டு அறிவித்தலொன்று பத்திரிகைகளின் அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் வெளியிடப்படும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நடைபெறும் திகதிக்கு குறைந்த பட்சம் ஐந்து நாட்களுக்கு முன்னர் தமது அனுமதிப் பத்திரம் கிடைக்காத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கு படுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கப்படும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன் பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் நிழற்படப்பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற எந்தத் தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் ஆயத்தமாக வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும்.

(VIII) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினது அனுமதியின் பேரில் பரீட்சையை பிற்போடுதல் அல்லது செல்லுபடியற்றதாக்கும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு உண்டு.

(IX) பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் உட்பட நேரிடும்.

(X) விண்ணப்பதாரியின் அடையாளம் :- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தி அடைகின்ற விதத்தில் சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை

II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

அவ்வாறே பரீட்சை விண்ணப்பதாரிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான வகையில் முகம், மற்றும் இரு காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்திற்கு நுழைதல் வேண்டும் அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியாகும் வரை பரீட்சை அதிகாரிக்கு விண்ணப்பதாரிகளை இனம்காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மூடாதிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.-

(அ) விண்ணப்பப்படிவத்திற்கு எந்தவொரு ஆவணமொன்றையோ, பிரதியொன்றையோ இணைக்காதிருத்தல் வேண்டும்.

(ஆ) கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் பற்றி கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(XI) விண்ணப்பதாரியொருவருக்குத் தகைமை இல்லை எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கு இடமுண்டு. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு விடயம் தவறானதென பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்பு வெளிப்படின் அல்லது ஏதாவது முக்கிய விடயமொன்றை வேண்டுமென மறைக்கப்பட்டிருப்பின் சேவையிலிருந்து விலக்கப்பட இடமுண்டு.

(XII) அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத்தோற்றுவதற்கு முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தினைத் தாம் சேவையாற்றும் நிறுவனத் தலைவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளல் கட்டாயமாகும்.

10. **பெறுபேறுகளை வெளியிடுதல்**.- எழுத்துப்பரீட்சையில் தகைமை பெறுகின்றவர்களின் பட்டியலை வர்த்தமானி அறிவித்தலின் 8.1.2 பந்தியின் பிரகாரம் செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக் குழுவுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அறிவித்தல் அல்லது www.exam.results.gov.lk இணையத்தளத்தில் வெளியிடப்படல், நியமனம் வழங்கும் செயற்பாடுகள் பூர்த்தியானதன் பின்பு இடம் பெறும்.

11. இந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினது தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதாவது இணக்கப்பாடின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவின் ஆணைப்படி,

என். எச். எம். சித்ரானந்த,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2020, சனவரி 27.

**உப அட்டவணை I**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் IIIஆம் தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப்பரீட்சைக்கான புள்ளித்திட்டம்.

(இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் இரண்டாம் மொழி தமிழ் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்காக)

**I ஆம் பகுதி - தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை - உச்ச புள்ளிகள் 50**

**குறிப்பு:** வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள சான்றிதழ்களுக்காக உச்ச புள்ளி எல்லைக்குள் புள்ளிகள் வழங்கப்படுவதோடு மேலதிகமாக ஒரு சான்றிதழை கவனித்திற் கொள்வது ஒரு நியதிக்காக மாத்திரமே ஆகும்.

01. கல்வித் தகைமைகள் — உச்ச புள்ளிகள் 20
- 1.1 பட்டப்பின் பட்டம் (கல்வியியல் அல்லது உரிய பாடம் தொடர்பான) — 20
- 1.2 பட்டப்பின் டிப்ளோமா — 10

02. ஆங்கில மொழித்தேர்ச்சி — உச்ச புள்ளிகள் 15
- 2.1 பட்டத்திற்கு ஆங்கிலத்தை பிரதான பாடமொன்றாக சித்தியடைந்திருத்தல் (ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் அறிவித்தலின் குறிப்பு 4 இற்கு ஏற்புடையதாகும்) — 15
- 2.2 க.பொ.த (உயர்தரம்) ஆங்கிலத்தை பிரதான பாடமொன்றாக சித்தியடைந்திருத்தல் — 10
- 2.3 டிப்ளோமா சான்றிதழ்(ஒருவருடத்திற்கு குறையாத) — 08
- 2.4 சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் (06 மாதத்திற்கு குறையாத) — 04
- 2.5 க.பொ.த (சா.தரம்) ஆங்கில இலக்கியத்தில் விஷேட/அதிதிறமை/திறமைச்சித்தி — 03
- 2.6 க.பொ.த (சா.தரம்) ஆங்கில பாடத்தில் விஷேட/அதிதிறமை/திறமைச்சித்தி — 02

03. தகவல் தொழில்நுட்ப அறிவு — உச்ச புள்ளிகள் 15
- 3.1 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் — 15
- 3.2 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் — 12
- 3.3 பட்டத்திற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமொன்றாக கற்றிருத்தல் (ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் அறிவித்தலின் குறிப்பு 4 இற்கு ஏற்புடையதாகும்) — 10
- 3.4 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் (ஒரு வருடத்திற்கு குறையாத) — 08
- 3.5 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் (06 மாதங்களுக்கு குறையாத) — 06
- 3.6 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான 03 மாதங்களுக்கு குறையாத 06 மாதங்களுக்கு மேற்படாத சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் — 04

**குறிப்பு 01 :**

2.3, 2.4, 3.4, 3.5, 3.6 இற்குரிய சான்றிதழ்களில் காலம் குறிப்பிடப்படாது இருப்பின் சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் காலத்தை உறுதி செய்த ஆவணத்தை நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு :- 02**

1.1, 2.1, 1.2, 2.1, 2.3, 2.4, 3.1, 3.2, 3.3 இற்குரிய சான்றிதழ்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்தோ அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்தோ பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும்.

**மொத்தப்புள்ளிகள் 50**

II ஆம் பகுதி – செயன்முறைப் பரீட்சை – உச்ச புள்ளிகள் 50

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்பு | உச்ச புள்ளிகள் | தெரிவு செய்யப்படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த பட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. பாடக்குறிப்பு தயாரித்தல் | 20 | 20 |
| 2. முன்வைப்பு | 30 | |
| 2.1 பிரவேசம் | 04 | |
| 2.2 பாடத்திட்டத்தின் விடயங்களை சுருக்கமாக முன்வைத்தல் | 04 | |
| 2.3 முன்வைக்கும் பாங்கு | 08 | |
| 2.4 விடய உள்ளடக்கம் | 10 | |
| 2.5 நேர முகாமைத்துவம் | 04 | |
| **மொத்தம்** | **50** | |

**உப அட்டவணை II**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் IIIஆம் தரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கான புள்ளித்திட்டம்.

(இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் இரண்டாம் மொழி தமிழ் பாடங்களுக்காக)

**I ஆம் பகுதி - தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை - உச்ச புள்ளிகள் 50**

**குறிப்பு:** வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள சான்றிதழ்களுக்காக உச்ச புள்ளி எல்லைக்கு உட்பட்டதாக புள்ளிகள் வழங்கப்படுவதோடு மேலதிகமாக ஒரு சான்றிதழை கவனித்திற் கொள்வது ஒரு நியதிக்காக மாத்திரமே ஆகும்.

01. கல்வித் தகைமைகள் — உச்ச புள்ளிகள் 20
- 1.1 பட்டப்பின் பட்டம் (கல்வியியல் அல்லது உரிய பாடம் தொடர்பான) — 20
- 1.2 பட்டப்பின் டிப்ளோமா — 10
- 1.3 அரச கருமமொழித் திணைக்களத்தின் சிங்களம்/ தமிழ் II ஆம் மட்ட சித்தி அல்லது க.பொ.த (சா.தரம்) இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடத்திற்கு திறமைச்சித்தியுடன் அரச கரும மொழித்திணைக்களத்தின் வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (இதன் கீழ் இரண்டாம் மொழி சிங்களத்துக்காக தமிழ் மொழிச் சான்றிதழும் இரண்டாம் மொழி தமிழுக்காக சிங்கள மொழிச் சான்றிதழுக்கும் புள்ளிகள் வழங்கப்படும்) — உச்ச புள்ளிகள் 20 — 05

02. ஆங்கில மொழித்தேர்ச்சி — உச்ச புள்ளிகள் 15
- 2.1 பட்டத்திற்கு ஆங்கிலத்தை பிரதான பாடமொன்றாக சித்தியடைந்திருத்தல் (ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் அறிவித்தலின் குறிப்பு 4 இற்கு ஏற்புடையதாகும்) — 15
- 2.2 க.பொ.த (உயர்தரம்) ஆங்கிலத்தை பிரதான பாடமொன்றாக சித்தியடைந்திருத்தல் — 10
- 2.3 டிப்ளோமா சான்றிதழ் (ஒரு வருடத்திற்கு குறையாத) — 08
- 2.4 சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் (06 மாதத்திற்கு குறையாத) — 04
- 2.5 க.பொ.த (சா.தரம்) ஆங்கில இலக்கியத்தில் விஷேட /அதி திறமை/திறமைச் சித்தி — 03
- 2.6 க.பொ.த (சா.தரம்) ஆங்கில பாடத்தில் விஷேட/அதிதிறமை/திறமைச் சித்தி — 02

03. தகவல் தொழில்நுட்ப அறிவு — உச்ச புள்ளிகள் 15
- 3.1 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் — 15
- 3.2 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் — 12
- 3.3 பட்டத்திற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமொன்றாக கற்றிருத்தல் (ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் அறிவித்தலின் குறிப்பு 4 இற்கு ஏற்புடையதாகும்) — 10
- 3.4 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் (ஒரு வருடத்திற்கு குறையாத) — 08
- 3.5 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் (06 மாதங்களுக்கு குறையாத) — 06
- 3.6 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான 03 மாதங்களுக்கு குறையாத 06 மாதங்களுக்கு மேற்படாத சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் — 04

**குறிப்பு :- 01**

2.3, 2.4, 3.4, 3.5, 3.6 இற்குரிய சான்றிதழ்களில் காலம் குறிப்பிடப்படாது இருப்பின் சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் காலத்தை உறுதி செய்த ஆவணத்தை நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**குறிப்பு :- 02**

1.1, 1.2, 2.1, 2.3, 2.4, 3.1, 3.2, 3.3 இற்குரிய சான்றிதழ்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்தோ அல்லது பட்டம் வழங்கும் நிறுவன மொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்தோ பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும்.

**மொத்தப்புள்ளிகள் 50**

II ஆம் பகுதி – செயன்முறைப் பரீட்சை – உச்ச புள்ளிகள் 50

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்பு | உச்ச புள்ளிகள் | தெரிவு செய்யப்படுவதற்கு கவனத்திற் கொள்ளப்படும் குறைந்த பட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| **5. பாடக்குறிப்பு தயாரித்தல்** | **20** | 20 |
| **6. முன்வைப்பு** | **30** | |
| 2.1 பிரவேசம் | 04 | |
| 2.2 பாடத்திட்டத்தின் விடயங்களை சுருக்கமாக முன்வைத்தல் | 04 | |
| 2.3 முன்வைக்கும் பாங்கு | 08 | |
| 2.4 விடய உள்ளடக்கம் | 10 | |
| 2.5 நேர முகாமைத்துவம் | 04 | |
| **மொத்தம்** | **50** | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்காக)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2019(2020)

**Limited Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Teacher Educators Service – 2019(2020)**

(வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இரண்டு பிரதிகளில் சமர்ப்பிக்குக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் – 2
தமிழ் – 3
ஆங்கிலம் – 4 (உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக)

விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் பாட இலக்கத்தை தமது விருப்பத்தின் பிரகாரம் கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடுக (வர்த்தமானி அறிவித்தலின் இலக்கம் 07பந்திக்கு ஏற்புடையதாக)

| விருப்பு இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

1.

1.1. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ……………………………………………………
……………………………………………………………………………………………
(உ-ம். :HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)

1.2. பின்னால் வரக்கூடிய பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்னாலும் இட்டுபெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :……………………
……………………………………………………………………………………………
(உ-ம். : GUNAWARDENA, H.M.S.K.)

1.3. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :……………………………………………………………………
……………………………………………………………………………………………………………

2.

2.1. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :………………………………………………
……………………………………………………………………………………………………………

2.2. (i) அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ………………………………………
……………………………………………………………………………………………………………
(ii) அலுவலக முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) : ……………………………………………………
……………………………………………………………………………………………………………
(iii) உரிய வலயம் :……………………………………………………………………………………

2.3. அலுவலக தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :…………………………………………………………

2.4. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :……………………………………………………………
……………………………………………………………………………………………………………

2.5. பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): …………
……………………………………………………………………………………………………………

2.6. தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :…………………………………………………………

3. தேசிய அடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

4. ஆண்/பெண்
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக)

5.

5.1. பிறந்த திகதி

வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

5.2. 2020.03.06 ஆந் திகதிக்கு வயது

வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள் : ☐☐

6. கல்வித் தகைமைகள்

| தொடர் இலக்கம் | விண்ணப்பிக்கின்ற பாட இலக்கமும் பாடமும் | ஆட்சேர்ப்புச் செய்யும் அறிவித்தலின் தொடர் இலக்கம் 04(II) இன் பிரகாரம் விண்ணப்பிக்கும் பிரிவு | தகைமைகள் பற்றிய விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அடிப்படைப் பட்டம்/பட்டப்பின் கல்வி டிப்ளோமா/பட்டப்பின் பட்டம் வேறு தகைமைகள் (பெயர்) மற்றும் வழங்கிய நிறுவனம் | செல்லுபடியாகும் திகதி | வகுப்பு/ சித்தி | பிரதான பாடங்கள் (ஆட்சேர்ப்புச் செய்யும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட 04 இன் பிரகாரம் உறுதிப்படுத்தல் வேண்டும்) |
| (1) | | | | | | |
| (2) | | | | | | |
| (3) | | | | | | |

07.

| முன்னைய சேவைகள் | சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதியும் சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதியும் | தற்போதைய சேவையும் சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதியும் | தற்போதய சேவை நிரந்தரமாக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| உதா.: ஆசிரியர் சேவை | உதா.: 1990-01-01 | உதா.: அதிபர் சேவை | உதா.: 2005-01-01 |
| | | | |

08. ஆசிரியர் சேவையில் சேவையாற்றுவதாயின்/சேவையாற்றி இருப்பின்

| நியமனத் திகதி | நியமனம் பெற்ற பாடம் | போதானாவியல் டிப்ளோமா | | | ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் | |
|---|---|---|---|---|---|---|
| | | செல்லுபடியாகும் திகதி | பாடப்பரப்பு/ துறை | கல்வியியற் கல்லூரி | செல்லுபடியாகும் திகதி | ஆசிரியர் கலாசாலை |
| | | | | | | |
| | | | | | | |

09. நீர் அரசாங்க சேவையில் சேர்வதற்கு தகைமை பெற்ற பரீட்சையில் சித்தியடைந்த மொழி மூலத்தைக் குறிப்பிடுக :- ………..

10. பரீட்சைக்கட்டணம்:

பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை இங்கு ஒட்டுக
(பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை வைத்துக் கொள்க)

01. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைப் பிரகாரம் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் ……………… மற்றும் …………….. திகதி கொண்ட பற்றுச்சீட்டு இதில் இணைக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையின் சட்டதிட்டங்களின் பிரகாரம் செயற்படவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற சட்டதிட்டங்களின் பிரகாரம் செயற்படவும், இந்தப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகைமையற்றவன் என வெளிப்படுத்தப்பட்டின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடைபெறும் போதோ எனது அபேட்சகத் தன்மையை செல்லுபடியற்றதாக்கவோ அல்லது மேற்கொள்ளப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். நான் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின்பாயினும் தகைமையற்றவன் என வெளிப்படின் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உடன்படல் வேண்டும் என்பதை அறிவேன்.மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பான பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிகின்றேன் என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

திகதி :- …………………. ……………………………………..
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திணைக்களத் தலைவர்/வலயக் கல்விப் பணிப்பாளர்/நிறுவனத் தலைவர்

இவ் விண்ணப்பப்படிவத்தில் சமர்ப்பிக்கின்ற வண./திரு./திருமதி/செல்வி ……………………………………………… ……………………………………… எனது பாடசாலையில்/ நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற ஒரு அதிபர்/ ஒரு ஆசிரியர் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி…………………… ……………………………………………
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவிமுத்திரையை இடுக)

பரீட்சைஆணையாளர் நாயகம்,

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற வண./திரு./திருமதி/செல்வி………………………………………… எனது வலயத்தில் ……………………………… சேவையாற்றும் ஆசிரியர் எனவும், இலக்கம் 01 தொடக்கம் 10 வரையுள்ள பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பாடசாலையில் உள்ள அவரது தனிப்பட்ட கோப்பின் பிரகாரம் சரியானவை எனவும், குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி…………………… ……………………
வலயக் கல்விப் பணிப்பாளர்/
மாகாண கல்விப் பணிப்பாளர்,
(பதவி முத்திரையை இடுக).

2-206

---

### அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு

கல்வி அமைச்சு

### இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2019(2020)

கல்வி அமைச்சின் கீழுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி மத்திய நிலையங்களில் இலங்கையின் ஆசிரியர் கல்வியலாளர் சேவை III ஆம் தரத்தில் காணப்படுகின்ற 384 வெற்றிடங்களை திறந்த போட்டிப்பரீட்சையொன்றின் மூலம் நிரப்புவதற்காக பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினது கல்விச் சேவைக்குழுவின் ஆணைப்படி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலின் இறுதியில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, நிறுவன மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை ஆசிரியர் கல்வியலாளர் சேவை III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை -2019" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி : 2020.03.06

விண்ணப்பப்படிவமொன்று அல்லது அது தொடர்பான கடிதமொன்று தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் பற்றி செய்யப்படும் முறைப்பாடுகள் பற்றி கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதால் ஏற்படக்கூடிய நஷ்டங்களை விண்ணப்பதாரிகளினாலேயே ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

**1) சேவையில் இணைத்துக் கொள்வதற்கான முறை :**

அ) எழுத்து மூலப் பரீட்சையினதும்,பொது,நேர்முகப் பரீட்சை, தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையினதும் மற்றும் செயன்முறைப் பரீட்சையினதும்பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும், சித்தியெய்வதற்குத் தேவையான 40% ஆன ஆகக் குறைவான புள்ளியைப் பெற்றவர்கள் மற்றும் இதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றவர்களிடையே வெற்றிட எண்ணிக்கையைப்போன்று மூன்று மடங்கினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பொது நேர்முகப் பரீட்சையில் உரிய அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சையின் போது பெற்றுக்கொண்ட புள்ளிகள் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக் குழுவுக்கு வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு -01**

எழுத்துப் போட்டிப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் சித்தியடைய தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளான 40% வீதம் அல்லது அதற்கு கூடிய புள்ளிகளைப் பெறுவதன் மூலம் நேர்முகப் பரீட்சைக்கு கட்டாயம் அழைக்கப்படல் வேண்டும் எனக் கருதக்கூடாது.

அ) பொதுவான நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.
ஆட்சேர்ப்புக்காக பகிரங்கப்படுத்தப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளை சகல விதங்களிலும் பூர்த்தி செய்துள்ளாரா என இங்கு பரீசிக்கப்படும். பூர்த்தி செய்யாவிட்டால் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப்பரீட்சைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

ஆ) தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன் முறைப் பரீட்சைக்கான புள்ளி வழங்கும் முறை இவ்வறிவித்தலின் அட்டவணை 5 மற்றும் 6 இன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவினால் பொது நேர்முகப்பரீட்சை,தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும்செயன்முறைப்பரீட்சை நடாத்தப்படும். எழுத்து மூலப்பரீட்சை,தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் கீழானதுமான செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்குத் தேவையான புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளில் எழுத்துப் பரீட்சையிலும் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையிலும் பெற்றுக் கொண்ட புள்ளிகளது கூட்டுத்தொகையின் திறமை வரிசைப் படி வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையினர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். சம புள்ளிகள் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் ஒருவரைவிடக் கூடுதலாகக் காணப்படுவார்களாயின் அது தொடர்பான தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் எடுக்கப்படும். நியமனம் அமுலாகும் திகதி மற்றும் நியமிக்கப்படும் எண்ணிக்கை பற்றி அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிட எண்ணிக்கையை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவுக்கு அதிகாரம் உண்டு. எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இடம் பெறுவதோடு விண்ணப்பதாரிகளுக்கு தாம் விரும்பியதொரு மொழி மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலமே

இணைத்துக்கொள்ளப்படுவர். சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பிக்கின்ற பாடத்தின் மொழி மூலமே எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தியடைதல் வேண்டும் என்பதோடு செயன்முறைப் பரீட்சையையும் அதே மொழி மூலமே மேற்கொள்ளல் வேண்டும். இந்த அறிவித்தலின் இலக்கம் 4 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் விண்ணப்பிக்கின்ற மொழி மூலம் இருத்தல் அவசியமன்று.

இ) திறந்த போட்டிப்பரீட்சை மூலம் பூரணப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உத்தேச வெற்றிட எண்ணிக்கைகள் அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வெற்றிடங்கள் தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள் மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கானது என்பதோடு இவ்வெற்றிடங்கள் இணைத்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் புள்ளிகள் வரிசையினை அடிப்படையாகக் கொண்டு பூர்த்தி செய்யப்படும். வெற்றிடங்கள் தேசிய கல்வியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை மற்றும் ஆசிரியர் மத்திய நிலையங்கள் என்பதாக காணப்படும் விதத்தினை அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு விண்ணப்பதாரி ஒரே மொழி மூலம் கீழே வெற்றிடங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் 03 இற்காக விண்ணப்பிக்க முடியும். ஒரு விண்ணப்பதாரி பல பாடங்களுக்கு தகைமை பெற்றால் அவர் தனது விண்ணப்பப்படிவத்தில் பாடங்களை விண்ணப்பித்துள்ள வரிசைப் பிரகாரம் இணைத்துக் கொள்ளும் பாடம் தீர்மானிக்கப்படும். அவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாட ஒழுங்கினை விண்ணப்பதாரி பின்னர் மாற்ற முடியாது.

அட்டவணை 01: இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளல்

பாடங்கள் மற்றும் மொழியின் அடிப்படையில்2019.08.06 ஆந் திகதி வரை வெற்றிட எண்ணிக்கை

| தொ. இல | பாடங்கள் | திறந்த | | | |
|---|---|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் |
| 1 | தொழிற்பாடம் | 60 | 25 | 11 | 96 |
| 2 | சிங்கள மொழி (தாய் மொழி) | 24 | 0 | 0 | 24 |
| 3 | சிங்கள மொழி (இரண்டாம் மொழி) | 19 | 0 | 0 | 19 |
| 4 | தமிழ் மொழி (தாய்மொழி) | 0 | 9 | 0 | 9 |
| 5 | தமிழ் மொழி (இரண்டாம் மொழி) | 0 | 36 | 0 | 36 |
| 6 | ஆங்கிலம் | 0 | 0 | 47 | 47 |
| 7 | சுகாதாரமும், உடற் கல்வியும் | 10 | 4 | 1 | 15 |
| 8 | நடனம் (கீழைத்தேய) | 7 | 0 | 0 | 7 |
| 9 | நடனம் (பரதம்) | 0 | 3 | 0 | 3 |
| 10 | சங்கீதம் (கீழைத்தேய) | 6 | 0 | 0 | 6 |
| 11 | சங்கீதம் (கர்நாடகம்) | 0 | 5 | 0 | 5 |
| 12 | மேலைத்தேய சங்கீதம் | 0 | 0 | 1 | 1 |
| 13 | சித்திரம் | 9 | 5 | 0 | 14 |
| 14 | நாடகமும், அரங்கியலும் | 5 | 2 | 0 | 7 |
| 15 | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | 4 | 3 | 3 | 10 |
| 16 | ஆரம்பக் கல்வி | | | | |
| | 161 தாய்மொழி | 2 | 2 | 0 | 4 |
| | 162 அழகியற் கல்வியும் ஆக்கத்திறனும் | 5 | 4 | 0 | 9 |
| | 163 உடற் கல்வி | 1 | 2 | 0 | 3 |
| | 164 விசேட கல்வி | 1 | 0 | 0 | 1 |
| | 165 ஆங்கிலம் | 0 | 0 | 6 | 6 |
| | 166 விஞ்ஞானம் | 2 | 0 | 0 | 2 |
| | 167 கணிதம் | 6 | 2 | 0 | 8 |
| | 168 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 6 | 3 | 0 | 9 |
| | 169 சமயம் | 3 | 1 | 0 | 4 |
| 17 | பௌத்த சமயம் | 5 | 0 | 0 | 5 |
| 18 | கத்தோலிக்க சமயம் | 1 | 1 | 0 | 2 |
| 19 | கிறிஸ்தவ சமயம் | 1 | 1 | 0 | 2 |
| 20 | இந்து சமயம் | 0 | 1 | 0 | 1 |
| 21 | இஸ்லாம் | 0 | 1 | 0 | 1 |
| 22 | கணிதம் | 1 | 1 | 1 | 3 |
| 23 | உயிரியல் | 1 | 0 | 1 | 2 |
| 24 | இரசாயனவியல் | 1 | 0 | 1 | 2 |
| 25 | பௌதீகவியல் | 1 | 0 | 1 | 2 |
| 26 | மின்சார, இலத்திரனியல் தொழில்நுட்பம் | 0 | 1 | 0 | 1 |
| 27 | நுண்கலை (மட் பாண்டமும் கைப்பணிக் கைத்தொழிலும்) | 1 | 1 | 0 | 2 |
| 28 | குடியுரிமைக் கல்வி | 2 | 2 | 0 | 4 |
| 29 | வரலாறு | 1 | 0 | 0 | 1 |
| 30 | புவியியல் | 1 | 1 | 0 | 2 |
| 31 | விவசாய விஞ்ஞானம் | 1 | 0 | 0 | 1 |
| 32 | விசேட கல்வி | 1 | 2 | 0 | 3 |
| 33 | மனைப் பொருளியல் | 0 | 2 | 0 | 2 |
| 34 | முயற்சியாண்மைக்கல்வி | 0 | 1 | 0 | 1 |
| 35 | முகாமைத்துவக் கல்வி | 1 | 1 | 0 | 2 |
| | மொத்தம் | 189 | 122 | 73 | 384 |

அட்டவணை 02: தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை மற்றும் ஆசிரியர் நிலையங்களில் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III தரத்தில் 2019.08.06 ஆந்திகதிக்கு வெற்றிடங்கள் காணப்படும் விதம்.

| | திறந்த | | | |
|---|---|---|---|---|
| நிறுவனம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் |
| தேசிய கல்வியியற் கல்லூரி | 77 | 42 | 19 | 138 |
| ஆசிரியர் நிலையம் | 86 | 51 | 35 | 172 |
| ஆசிரியர் கலாசாலை | 26 | 29 | 19 | 74 |
| | 189 | 122 | 73 | 384 |

02. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :-

I. இலங்கைச் சனநாயக சோசலிஸ குடியரசின் இலக்கம் 1925/ 37 மற்றும் 2015.07.28 ஆந் திகதி கொண்ட அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மற்றும் இலக்கம் 2141/ 73 கொண்ட 2019/09/19 ஆந் திகதிய இலக்கம் 2153/06 கொண்ட 2019/12/09 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அந்த பிரமாணக்குறிப்பிற்கு இதன் பிறகு மேற்கொள்ளப்படக்கூடிய திருத்தங்களுக்கும் அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்துகின்ற பொதுவான நிபந்தனைகளுக்கும் கீழ்ப்படிந்து தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் சேவையின் IIIஆம் தரத்துக்கு நியமிக்கப்படுவர்.

II. இப்பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தியோகத்தர்கள் மூன்று வருடகால நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுவார்.

III. ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்டு 03 (மூன்று) வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

IV. அரசாங்க நிர்வாக சுற்று நிருப இல. 01/2014 மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றுநிருபத்தின் பிரகாரம் குறித்த ஏனைய அரசகரும மொழி பற்றிய உரிய தேர்ச்சி மட்டத்தை நியமனத்திகதியில் இருந்து 05 (ஐந்து) வருடங்களுக்குள் பெற்றிருத்தல் வேண்டும். அரச கரும மொழி ஒன்றல்லாத மொழி ஒன்றின் மூலம் சேவைக்கு இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் 03 (மூன்று) வருடங்களுக்குள் ஒரு அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியை பெற்றிருக்க வேண்டியதோடு சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்ளப்படும் திகதியில் இருந்து 03 (மூன்று) வருடத்திற்குள் இணைப்பு மொழியான ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். உத்தியோகத்தர் ஒருவர் கா.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி அல்லது அதைவிடக்கூடிய சித்தியடைந்து இருப்பின் இணைப்பு மொழிச் சித்தியடையும் தேவையில் இருந்து விடுவிக்கப்படுவார். ஏனைய உத்தியோகத்தர்கள் சேவைப்பிரமாணத்தின் உப அட்டவணை(VIII) இல் குறிப்பிடப்பட்ட பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். ஆங்கில மொழி மூலம் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் இத்தேவையில் இருந்து விடுவிக்கப்படுவார்.

V. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், காலத்திற்குக் காலம் அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவைப்பிரமாணம் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகும்

VI. வதிவிட வசதிகள் வழங்கப்பட்டிருப்பின் கல்விக்கல்லூரி எல்லைக்குள் வசித்தல் வேண்டும் வதிவிட வசதி இல்லாத போது மட்டுப்படுத்தப்பட்ட தூரத்தில் வசிக்க அனுமதி வழங்கப்படும். எனினும் கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை அல்லது ஆசிரியர் நிலைய எல்லையில் வீட்டுவசதி வழங்கப்பட்டிருப்பின் அங்கு வசித்தல் வேண்டும்.

VII. தேசிய கல்வியியற் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை அல்லது ஆசிரியர் நிலையங்களில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதோடு ஆட்சேர்ப்புச் செய்யும் பரீட்சையின் திறமை அடிப்படையில் பதவி நிலைப்படுத்தப்படும் கல்வியியற் கல்லூரி, அல்லது ஆசிரியர் கலாசாலை அல்லது ஆசிரியர் நிலையத்தில் சேவையாற்ற இணங்குதல் வேண்டும்.

**03. சம்பள அளவுத்திட்டம்**

இப்பதவிக்கு அரசாங்க சுற்றுநிருப இல 03/2016 கொண்ட சம்பள சுற்றுநிருபத்தின் பிரகாரம் SL-01-2016 இன் ரூ. 47,615-10 - 1,335-8-1,630-17-2,170-110,895/- (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் உரித்தாகும்.

04. தகைமைகள் மற்றும் அனுபவம்

I. பொதுவான தகைமைகள் :

i. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்;

ii. திறந்த போட்டிப்பரீட்சைக்காக மூன்று (03) தடவைகளுக்கு மேல் தோற்றுவதற்கு யாருக்கும் அனுமதி இல்லை.

iii. தகைமை பெறும் திகதி - சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக் கொள்ளப்படுவது, விண்ணப்பதாரி 04 தொடக்கம் 06 ஆம் பந்தி வரை குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் சகல விதங்களிலும் பூரணப்படுத்தியிருத்தால் மாத்திரமே ஆகும்.

II. கல்வித் தகைமைகள் :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து கீழ்க் குறிப்பிடப்படும் தகைமைகள் ஒன்றினைப்பெற்றிருத்தல் வேண்டும்.

i. குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் பெற்றுக்கொண்ட வகுப்புச்சித்தியுடன் கூடிய அடிப்படைப்பட்டமொன்று

ii. குறித்துரைக்கப்பட்ட பாடத்தின் அடிப்படைப்பட்டத்துடன் அப்பாடத்துக்குரிய பட்டப்பின் பட்டமொன்று

iii. குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் அடிப்படைப்பட்டத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவொன்று அல்லது குறித்துரைக்கப்பட்ட பாடப்பரப்பில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவொன்று

iv. குறித்துரைக்கப்பட்ட பாடத்தில் அடிப்படைப் பட்டத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின்பட்டமொன்று

**குறிப்பு :- 02**

தொழிற்பாடத்துக்கு மாத்திரம் எந்த பாடப்பரப்பினதும் அடிப்படை பட்டத்துடன் கல்வி தொடர்பான பட்டப்பின் பட்டமொன்று கவனத்தில் கொள்ளப்படும்.

**குறிப்பு -03**

"குறித்துரைக்கப்பட்ட பாடம் என்பது 1925/37மற்றும் 2015/07/28ஆம் திகதிய சேவைப்பிரமாணத்தினதும் இலக்கம் 2141/73மற்றும் 2019/09/19ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் சேவைப்பிரமாணத்தின் உப அட்டவணை 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் ஆகும்."

**குறிப்பு -04**

விண்ணப்பிக்கின்ற பாடத்துறையின் பிரதான பாடங்களில் ஒன்றை பட்டத்திற்காக கற்றிருத்தல் கட்டாயம் என்பதோடு பட்டத்துக்காக கற்கின்ற பிரதான பாடம் மொத்தப் பாடத்தொகையின் மூன்றில் ஒன்றாவது (1/3) விண்ணப்பிக்கின்ற பாடத்துக்கு ஏற்புடைய பாடமாக இருத்தல் வேண்டும். அது பற்றி பட்டத்திற்குரிய பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு அவ்வுறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழை நேர்முகப்பரீட்சை சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி மற்றும் தொழிற்றகைமைகளைப் பூர்த்தியாக்கப்பட்டிருப்பது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட பட்டமொன்றின் அடிப்படையில் எனின், அப்பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றாகும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட கடிதமொன்றை பொதுநேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் கட்டாயமாகும். மேற்படி உறுதிப்படுத்தும் சான்றிதழை விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சை சந்தர்ப்பத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும் என்பதோடு பின்னர் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் பொறுப்பேற்கப்படமாட்டாது.

II. அனுபவம் : பொருத்தமற்றது.

**05. வயதெல்லை:**

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதிக்கு வயது 22 வருடங்களுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

"அதன் பிரகாரம் 1998.03.06 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1985.03.06 திகதிக்கு அல்லது அதற்குப்பின்னர் பிறந்தவர்களுக்கு மாத்திரம் இதற்காக விண்ணப்பிக்க தகுதி உண்டு"

**06. உடற் தகைமைகள் :-**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கும், பதவிக்குரிய கடமையை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உளத் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

07. **விண்ணப்பிக்கும் முறை:-**

சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கு அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ஒரு விண்ணப்பதாரிக்கு 3 பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடிவதோடு விண்ணப்பதாரிக்கு பாடங்கள் மற்றும் அதற்குரிய பாடஇலக்கங்களை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட இடத்தில் சரியாக குறிப்பிடுதல் கட்டாயமாகும். அரசாங்க சேவைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல் அரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்த மற்றும் கல்வி அமைச்சின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுவதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

அட்டவணை 03 : சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் பாடங்களும் உரிய பாடத்துக்கான இலக்கங்களும்

| பாடப்பரப்பு | பாடஇலக்கம் |
|---|---|
| தொழில்சார் பாடங்கள் | 01 |
| சிங்கள மொழி (தாய் மொழி) | 02 |
| சிங்கள மொழி (இரண்டாம் மொழி) | 03 |
| தமிழ் மொழி (தாய்மொழி) | 04 |
| தமிழ் மொழி (இரண்டாம் மொழி) | 05 |
| ஆங்கிலம் | 06 |
| சுகாதாரமும், உடற் கல்வியும் | 07 |
| நடனம் (கீழைத்தேய) | 08 |
| நடனம் (பரதம்) | 09 |
| சங்கீதம் (கீழைத்தேய) | 10 |
| சங்கீதம் (கர்நாடகம்) | 11 |
| மேலைத்தேய சங்கீதம் | 12 |
| சித்திரம் | 13 |
| நாடகமும், அரங்கியலும் | 14 |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | 15 |
| ஆரம்பக் கல்வி - தாய்மொழி | 161 |
| ஆரம்பக் கல்வி - அழகியற் கல்வியும் ஆக்கத்திறனும் | 162 |
| ஆரம்பக் கல்வி - உடற் கல்வி | 163 |
| ஆரம்பக் கல்வி - விசேட கல்வி | 164 |
| ஆரம்பக் கல்வி - ஆங்கிலம் | 165 |
| ஆரம்பக் கல்வி - விஞ்ஞானம் | 166 |
| ஆரம்பக் கல்வி - கணிதம் | 167 |
| ஆரம்பக் கல்வி - சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 168 |
| ஆரம்பக் கல்வி சமயம் | 169 |
| பௌத்த சமயம் | 17 |
| கத்தோலிக்க சமயம் | 18 |
| கிறிஸ்தவ சமயம் | 19 |
| இந்து சமயம் | 20 |
| இஸ்லாம் | 21 |
| கணிதம் | 22 |
| உயிரியல் | 23 |
| இரசாயனவியல் | 24 |
| பௌதீகவியல் | 25 |
| மின்சார, இலத்திரனியல் தொழில்நுட்பம் | 26 |
| நுண்கலை (மட் பாண்டமும் கைப்பணிச் கைத்தொழிலும்) | 27 |
| குடியுரிமைக் கல்வி | 28 |
| வரலாறு | 29 |
| புவியியல் | 30 |
| விவசாய விஞ்ஞானம் | 31 |
| விசேட கல்வி | 32 |
| மனைப் பொருளியல் | 33 |
| முயற்சியாண்மைக்கல்வி | 34 |
| முகாமைத்துவக் கல்வி | 35 |

08. **ஆட்சேர்ப்பு**

8.1 எழுத்துப்பரீட்சை

8.1.1 இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் நடாத்தப்படும்.

8.1.2 பாடத்திட்டம் : அட்டவணை 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்கள் மூன்றின் கீழ் இப் பரீட்சை நடாத்தப்படும். பொது நேர்முகப் பரீட்சைக்காக தகைமை பெறுவது சகல வினாப்பத்திரங்களிலும் குறைந்த பட்சமாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகள் எழுத்துப்பரீட்சையில் காட்டுகின்ற திறமையின் அடிப்படையில் காணப்படுகின்ற வெற்றிட எண்ணிக்கையைப் போன்று மும்மடங்கினர் மாத்திரமே ஆகும். போட்டிப் பரீட்சையில் எல்லாப் பாடங்களுக்கும் சித்தியடைவதற்குத் தேவையான 40% குறைந்த பட்ச புள்ளிகளைப் பெறுவதை நேர்முகப்பரீட்சைக்கு கட்டாயமாக அழைக்கப்படுவதற்கான தகைமையொன்றாக இதன் மூலம் கருதப்படமாட்டாது.

**அட்டவணை 04 : பாடத்திட்டம்**

| தொடர் இலக்கம் | பாடம் | பாடத்திட்டம் | காலம் | உச்ச புள்ளி | சித்திய டைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 01 | பொது அறிவும் நுண்ணறிவும் | பகுதி-I<br>பொது அறிவு<br>(01 மணித்தியாலம்)<br><br>தேசிய, வலய மற்றும் உலகின் பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட சூழலில் போன்றே எமது சமூகத்திலும் காணப்படுகின்ற கலாச்சார, கல்வி, விஞ்ஞான, அரசியல், பொருளாதார மற்றும் பிற உரிய அடையாளங்கள் தொடர்பாக விண்ணப்பதாரியிடமுள்ள அறிவினை அள விடுவதை இதன் மூலம் எதிர் பார்க்கப்படுகின்றது<br><br>பகுதி - II<br>நுண்ணறிவு<br>(01 மணித்தியாலம்)<br><br>கிரகித்தல் மற்றும் எழுத்தியல், புள்ளிவிபர, உருவகச் சூழலில் சமர்ப்பிக்கப்படுகின்ற பிரச்சினை தொடர்பாக விண்ணப்பதாரியின் முடிவுகளையும் பதிலளித்தலையும் பரீட்சிப்பதனூடாக விண்ணப்பதாரியின் கிரகிக்கும் திறனையும் நுண் ணறிவையும் அளவிடுதல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது | 01 மணித்தி யாலம்<br><br>01 மணித்தி யாலம் | 100 | 40 |
| 02 | கிரகித்தல் | வழங்கப்பட்ட தலைப்பு/ கருப் பொருளின் ஊடாக கருத்துக்கள் மற்றும் தகவல்களை சமர்ப்பித் தல், கோவைப்படுத்தல் மற்றும் ஒலிபரப்புச் செய்தல் தொடர்பாக | 02 மணித்தி யாலம் | 100 | 40 |
| | | விண்ணப்பதாரி காட்டுகின்ற தர்க்க ரீதியான கற்பனைத் திறனை அளவிடுதல் மற்றும் ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, ஆவணமொன்றை அல்லது விஞ்ஞாபனமொன்றை புரிந்து கொள்வதற்கும் அதிலுள்ள பிரதான கருத்துக்களை தமது நடையில் சாராம்சமாக தெளிவாகவும் சரியாகவும் வெளிப்படுத்தவும் வழங்கப்பட்டுள்ள வகுதிக்கேற்ப தெரிவு செய்வதற்கு விண்ணப்பதாரிக்கு உள்ள திறனை அளவிட இதன் மூலம் எதிர்பார்க் கப்படுகின்றது | | | |
| 03 | விடய ஆய்வு | ஆசிரியர் கல்வி மற்றும் பாட சாலைகள் கல்வித் துறையினுள் ஏற்படக்கூடியதான நிகழ்வுகள் பல சமர்ப்பிக்கப்பட்டு அந் நிகழ்வுகளுக்கு பதில் வழங்குதல் மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் திறனை அளவிடும் நோக்கில் வினாக் கள் தரப்படும். | 01 மணித்தி யாலம் | 100 | 40 |

8.2 பொது நேர்முகப்பரீட்சை

(அ) எழுத்துப்பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் வெற்றிட எண்ணிக்கையைப் போன்ற மும்மடங்கு விண்ணப்பதாரிகளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சைக் குழுவினால் இந்நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

(ஆ) இதற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(இ) மேற்படி (அ) இன்படி தகைமை பெறும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடம் காணப்படுகின்ற தொகையின் மும்மடங்கு எண்ணிக்கை அளவு இல்லாத சந்தர்ப்பத்தில் பொது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவது அவ்வாறு தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே ஆகும்.

8.3 தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

பொது நேர்முகப்பரீட்சையின் போது அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்கள் என அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் இந்த தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(அ) இந்த நேர்முகப்பரீட்சைக்கு கீழே அட்டவணை 5 இன் நியதிகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

(ஆ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவொன்று மற்றும் விரிவான புள்ளித்திட்டத்தின் பிரகாரம் இப்பரீட்சை நடாத்தப்படும் (இவ்வறிவித்தலின் உப அட்டவணை I மற்றும் உபஅட்டவணை II)

அட்டவணை 05 - தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை - புள்ளி வழங்கும் நியதிகள்

| புள்ளி வழங்கும் நியதிகள் | உச்ச புள்ளி அளவு | சித்தியடைந்துள்ள புள்ளிகள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித்தகைமைகள் | 20 | பொருத்தமற்றது |
| 2. ஆங்கில மொழித்தேர்ச்சி | 15 | |
| 3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன் | 15 | |
| மொத்தப்புள்ளிகள் | 50 | |

8.4 செயன்முறைப் பரீட்சை

(அ) பொது நேர்முகப்பரீட்சையில் அடிப்படைத்தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனர் என அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம்

செயன்முறைப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சைக் குழுவொன்றினால் இது நடாத்தப்படும்.

**அட்டவணை - 06**

செயன்முறைப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படும் நியதிகள்

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்ச புள்ளிகள் அளவு | குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 1. நுழைவு | 05 | 20 |
| 2. விடய உள்ளடக்கம் | 20 | |
| 3. முன்வைக்கும் பாங்கு | 10 | |
| 4. நேர முகாமைத்துவம் | 10 | |
| 5. சாராம்சப்படுத்தல் | 05 | |
| மொத்தம் | 50 | |

**குறிப்பு- 05**

பொது நேர்முகப்பரீட்சையின் போது ஆட்சேர்ப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறுவர். மேலே கூறப்பட்டவாறு பொது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளிடையே ஒரு தொகையினர் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெறாவிட்டாலும் அவ்வாறு தகைமை பெற்றவர்களுக்குப் பதிலாக வேறு விண்ணப்பதாரிகள் மீண்டும் பொதுத்நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

**9. பரீட்சை நிபந்தனைகள்**

(I) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் தாம் விண்ணப்பிக்கும் பாடத்தின் மொழி மூலமே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலமே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பதாரியொருவருக்கு சொந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுகின்ற மொழிமூலத்தை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

(II) பரீட்சைக்கட்டணம் ரூபா 1200.00 ஆகும். பரீட்சைக்கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்த தபாலகத்தில் அல்லது உபதபாலகத்தில் அல்லது மாவட்ட/பிரதேச செயலகங்களில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக் கொள்ளும் பற்றுச் சீட்டின் ஓரத்தை விண்ணப்பப்படிவத்தின் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டுக. அப்பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றை தம்மிடம் வைத்துக் கொள்ளல் பயனளிக்கும். பரீட்சைக்கட்டணமாக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் பொறுப்பேற்கப்படமாட்டாது என்பதுடன் பரீட்சைக்குச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கவோ அல்லது வேறு ஒரு பரீட்சைக்கு மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

(III) பரீட்சைக்குச் செலுத்தப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீளஅளிக்கப்படமாட்டாது.

**குறிப்பு :-** அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்தில் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் தினத்தில் பரீட்சை மண்டப பொறுப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியது தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி பெறப்பட்ட அனுமதி அட்டை மாத்திரமாகும்.

விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொள்வதாகக் கருத முடியாது.

(IV) விண்ணப்பப்படிவம் A4 அளவு கடதாசியில் இருபக்கங்களையும் பயன்படுத்தி தயாரிக்கப்படவேண்டியதோடு 01 தொடக்கம் 04 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் 05 தொடக்கம் அடுத்த தலைப்புக்கள் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது பக்கங்களில் வருமாறு தயாரித்தல் வேண்டும். உரிய தகவல்களை தமது கையொழுத்தினாலேயே தெளிவாகப் பூரணப்படுத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அல்லாத விண்ணப்பப்படிவங்கள், பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றை தம்மிடம் வைத்துக் கொள்வது பயனளிக்கும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஒத்ததா என்பது பற்றி விண்ணப்பதாரியினால் விசாரித்தறியப்படல் வேண்டும் என்பதோடு அவ்வாறில்லாது விடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் அறிவிக்கின்றேன்.

(V) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் என்ற முன் முடிவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வயதெல்லைக்குள்ளான விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதிக்கு அல்லதுஅத்திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக்கட்டணம் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம் விண்ணப்பிக்கின்ற பாடம் மற்றும் குறியீட்டு இலக்கம், விண்ணப்பதாரியின் கையொப்பம்,கையொப்பத்தை உறுதிப்படுத்தல் சரியாயின் மாத்திரம் திணைக்களத்தலைவரது சான்றிதழுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்ட உடனே அது பற்றிக் குறிப்பிட்டு பத்திரிகைகளில் அல்லது இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு நாட்கள் அல்லது மூன்று நாட்களின் பின்னரும் தமது அனுமதிப் பத்திரம் கிடைக்காத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையில் விசாரித்தல் வேண்டும். அவ்வாறு விசாரிக்கப்படும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின், அவ்விபரங்களுடன் பெக்ஸ் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் நிழற்பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுள்ளதாகும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படுகின்ற எந்தத் தகவலையும் உறுதிப்படுத்துவதற்காக தம்மிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் நிழற்பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் ஆயத்தமாக வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும்.

(VI) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவினது அனுமதியின் பேரில் பரீட்சையை பிற்போடுதல் அல்லது செல்லுபடியற்றதாக்கும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு உண்டு.

(VII) பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் உட்பட நேரிடும்.

(VIII) விண்ணப்பதாரியின் அடையாளம் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தி அடைகின்ற விதத்தில் சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக கீழ்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அவ்வாறே பரீட்சை விண்ணப்பதாரிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமான வகையில் முகம், மற்றும் இரு காதுகளையும் மூடாது பரீட்சை மண்டபத்திற்கு நுழைதல் வேண்டும் அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கின்ற விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியாகும் வரை பரீட்சை அதிகாரிக்கு விண்ணப்பதாரிகளை இனம்காணும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மூடாதிருத்தல் வேண்டும்.

**குறிப்பு :-**

(அ) விண்ணப்பப்படிவத்திற்கு எந்தவொரு ஆவணமொன்றையோ, பிரதியொன்றையோ இணைக்காதிருத்தல் வேண்டும்.

(ஆ) கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப் படிவங்கள் பற்றி கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(IX) விண்ணப்பதாரியொருவருக்குத் தகைமை இல்லை எனத் தெரியவரின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கு இடமுண்டு. சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு விடயம் தவறானதென பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்பு வெளிப்படின் அல்லது ஏதாவது முக்கிய விடயமென்றை வேண்டுமென மறைக்கப்பட்டிருப்பின் சேவையிலிருந்து விலக்கப்பட இடமுண்டு.

(X) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சை அனுமதிப்பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்துதல் வேண்டும். அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளலும் குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி இருத்தலும் பற்றுச்சீட்டினை ஒட்டியிருத்தலும் கட்டாயமாகும் நிறுவனமொன்றிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரியொருவர் அவரது கையொப்பத்தினை தாம் சேவையாற்றும் நிறுவனத் தலைவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அரசாங்கப் பாடசாலை அதிபர்/ஓய்வு பெற்ற அதிபர், பிரதேச கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் முதன்மை உத்தியோகத்தர், அரசாங்க அல்லது மாகாண நிர்வாக சேவையில் அல்லது நிரந்தர பதவி நிலைத் தரத்தின் உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது தலைமைப் பிக்கு அல்லது ஏனைய சமயத்தலமொன்றுக்குப் பொறுப்பான சமயத்தலைவர் நிலையில் உள்ள ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

**10. பெறுபேறுகளை வெளியிடுதல்**

எழுத்துப்பரீட்சையில் தகைமை பெறுகின்றவர்களின் பட்டியலை வர்த்தமானி அறிவித்தலின் 8.1.2 பந்தியின் பிரகாரம் செயலாளர், அரசசேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவுக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் அறிவித்தல் அல்லது www.exam.results.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படல், நியமனம் வழங்கும் செயற்பாடுகள் பூர்த்தியானதன் பின்பு இடம் பெறும்.

11. இந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவினது தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

12. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதாவது இணக்கப்பாடின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாகக் கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் ஆணைப்படி,

என்.எச்.எம்.சித்ரானந்த,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2020, மாச்சு 27.

**உப அட்டவணை I**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் III ஆம் தரத்திற்கு திறந்த ஆட்சேர்ப்பின் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன் முறைப் பரீட்சைக்கான புள்ளித்திட்டம்

(இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் இரண்டாம் மொழி தமிழ் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்காக)

**I ஆம் பகுதி - தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை - உச்ச புள்ளிகள் 50**

**குறிப்பு**: வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள சான்றிதழ்களுக்காக உச்ச புள்ளி எல்லைக்குள் புள்ளிகள் வழங்கப்படுவதோடு மேலதிகமாக ஒரு சான்றிதழை கவனித்திற் கொள்வது ஒரு நியதிக்காக மாத்திரமே ஆகும்.

| | | |
|---|---|---|
| 01. கல்வித் தகைமைகள் | | உச்ச புள்ளிகள் 20 |
| 1.1 | பட்டப்பின் பட்டம் (கல்வியியல் அல்லது உரிய பாடம் தொடர்பான) | 20 |
| 1.2 | பட்டப்பின் டிப்ளோமா | 10 |
| 02. ஆங்கில மொழித்தேர்ச்சி | | உச்ச புள்ளிகள் 15 |
| 2.1 | பட்டத்திற்கு ஆங்கிலத்தை பிரதான பாடமொன்றாக சித்தியடைந்திருத்தல் (ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் அறிவித்தலின் குறிப்பு 4 இற்கு ஏற்புடையதாகும்) | 15 |
| 2.2 | க.பொ.த. (உயர்தரம்) ஆங்கிலத்தை பிரதான பாடமொன்றாக சித்தியடைந்திருத்தல் | 10 |
| 2.3 | டிப்ளோமா சான்றிதழ் (ஒரு வருடத்திற்கு குறையாத) | 08 |
| 2.4 | சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் (06 மாதத்திற்கு குறையாத) | 04 |

2.5 க.பொ.த. (சா.தரம்) ஆங்கில இலக்கியத்தில் விஷேட/அதிதிறமை/திறமைச்சித்தி 03
2.6 க.பொ.த. (சா.தரம்) ஆங்கில பாடத்தில் விஷேட/அதிதிறமை/திறமைச்சித்தி 02

03. தகவல் தொழில்நுட்ப அறிவு உச்ச புள்ளிகள் 15
3.1 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் 15
3.2 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் 12
3.3 பட்டத்திற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமொன்றாக கற்றிருத்தல் 10
(ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் அறிவித்தலின் குறிப்பு 4 இற்கு ஏற்புடையதாகும்)
3.4 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் (ஒருவருடத்திற்கு குறையாத) 08
3.5 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் (06 மாதங்களுக்கு குறையாத) 06
3.6 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான 03 மாதங்களுக்கு குறையாத 06 மாதங்களுக்கு மேற்படாத சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் 04

குறிப்பு :- 01
2.3, 2.4, 3.4, 3.5, 3.6 இற்குறிய சான்றிதழ்களில் காலம் குறிப்பிடப்படாது இருப்பின் சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் காலத்தை உறுதி செய்த ஆவணத்தை நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு :- 02 1.1, 1.2, 2.1. 2.3, 2.4, 3.1, 3.2, 3.3 இற்குரிய சான்றிதழ்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்தோ அல்லது பட்டம் வழங்கும் நிறுவன மொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்தோ பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும்.

மொத்தப்புள்ளிகள் 50

**II ஆம் பகுதி - செயன்முறைப் பரீட்சை - உச்ச புள்ளிகள் 50**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்ச புள்ளிகள் அளவு | குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 4. நுழைவு | 05 | 20 |
| 5. விடய உள்ளடக்கம் | 20 | |
| 6. முன்வைக்கும் பாங்கு | 10 | |
| 4. நேர முகாமைத்துவம் | 10 | |
| 5. சாராம்சப்படுத்தல் | 05 | |
| **மொத்தம்** | **50** | |

**உப அட்டவணை II**

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் IIIஆம் தரத்திற்கு திறந்த ஆட்சேர்ப்பின் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கான புள்ளித்திட்டம்

(இரண்டாம் மொழி சிங்களம் மற்றும் இரண்டாம் மொழி தமிழ் பாடங்களுக்காக)

**I ஆம் பகுதி - தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை - உச்ச புள்ளிகள் 50**

குறிப்பு: வர்த்தமானி அறிவித்தலின் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள சான்றிதழ்களுக்கு உச்ச புள்ளி எல்லைக்கு உட்பட்டதாக புள்ளிகள் வழங்கப்படுவதோடு மேலதிகமாக ஒரு சான்றிதழை கவனித்திற் கொள்வது ஒரு நியதிக்காக மாத்திரமே ஆகும்.

01. **கல்வித் தகைமைகள்** உச்ச புள்ளிகள் 20
1.1 பட்டப்பின் பட்டம் (கல்வியியல் அல்லது உரிய பாடம் தொடர்பான) 20
1.2 பட்டப்பின் டிப்ளோமா 10
1.3 அரச கருமமொழித் திணைக்களத்தின் சிங்களம்/தமிழ் II ஆம் மட்ட சித்தி அல்லது க.பொ.த. (சா.தரம்) இரண்டாம் மொழி சிங்களம்/தமிழ் பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் அரச கரும மொழித் திணைக்களத்தின் வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் (இதன் கீழ் இரண்டாம் மொழி சிங்களத்துக்காக தமிழ் மொழிச் சான்றிதழும் இரண்டாம் மொழி தமிழுக்காக சிங்கள மொழிச் சான்றிதழுக்கும் புள்ளிகள் வழங்கப்படும்) 05

02. **ஆங்கில மொழித்தேர்ச்சி** உச்ச புள்ளிகள் 15
2.1 பட்டத்திற்கு ஆங்கிலத்தை பிரதான பாடமொன்றாக சித்தியடைந்திருத்தல் (ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் அறிவித்தலின் குறிப்பு 4 இற்கு ஏற்புடையதாகும்) 15
2.2 க.பொ.த. (உயர் தரம்) ஆங்கிலத்தை பிரதான பாடமொன்றாக சித்தியடைந்திருத்தல் 10
2.3 டிப்ளோமா சான்றிதழ் (ஒரு வருடத்திற்கு குறையாத) 08
2.4 சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் (06 மாதத்திற்கு குறையாத) 04
2.5 க.பொ.த. (சா.தரம்) ஆங்கில இலக்கியத்தில் விஷேட/அதி திறமை/திறமைச்சித்தி 03
2.6 க.பொ.த. (சா. தரம்) ஆங்கில பாடத்தில் விஷேட/அதி திறமை/திறமைச்சித்தி 02

03. தகவல் தொழில்நுட்ப அறிவு உச்ச புள்ளிகள் 15
3.1 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டப்பின் பட்டம் 15
3.2 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் 12
3.3 பட்டத்திற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமொன்றாக கற்றிருத்தல் (ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் அறிவித்தலின் குறிப்பு 4 இற்கு ஏற்புடையதாகும்) 10
3.4 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் (ஒரு வருடத்திற்கு குறையாத) 08
3.5 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் (06 மாதங்களுக்கு குறையாத) 06
3.6 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான 03 மாதங்களுக்கு குறையாத 06 மாதங்களுக்கு மேற்படாத சான்றிதழ் பத்திர பாடநெறிச் சான்றிதழ் 04

குறிப்பு :- 01
2.3, 2.4, 3.4, 3.5, 3.6 இற்குரிய சான்றிதழ்களில் காலம் குறிப்பிடப்படாது இருப்பின் சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் காலத்தை உறுதி செய்த ஆவணத்தை நேர்முகப் பரீட்சை சந்தர்ப்பத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்

குறிப்பு :- 02
1.1,1.2, 2.1. 2.3, 2.4, 3.1, 3.2, 3.3, 4.6 இற்குரிய சான்றிதழ்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்தோ அல்லது பட்டம் வழங்கும் நிறுவன மொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்தோ பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும்.

மொத்தப்புள்ளிகள் 50

II ஆம் பகுதி - செயன்முறைப் பரீட்சை - உச்ச புள்ளிகள் 50

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்ச புள்ளிகள் அளவு | குறைந்த பட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 7. நுழைவு | 05 | 20 |
| 8. விடய உள்ளடக்கம் | 20 | |
| 9. முன்வைக்கும் பாங்கு | 10 | |
| 4. நேர முகாமைத்துவம் | 10 | |
| 5. சாராம்சப்படுத்தல் | 05 | |
| **மொத்தம்** | **50** | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பயன்பாட்டுக்காக)

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் **III** ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை -2019(2020)

**Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Teacher Educators Service – 2019(2020)**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக)

விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் பாட இலக்கத்தை கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடுக.
(வர்த்தமானிஅறிவித்தலின் இலக்கம் 07 பந்திக்கு ஏற்புடையதாக)

| விருப்பு இலக்கம் | பாடம் | பாட இலக்கம் |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |

1.
1.1. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ..............................................................
..............................................................
(உ-ம். :HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDENA)

1.2. பின்னால் வரக்கூடிய பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்னாலும் இட்டுபெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :..............................................................
..............................................................
(உ-ம். : GUNAWARDENA, H.M.S.K.)

1.3. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :..............................................................
..............................................................

2.
2.1. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :..............................................................
..............................................................

2.2 தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் (இருப்பின்) : ..............................................................

2.3 மின்னஞ்சல் முகவரி : ..............................................................

2.4. (i) அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ..............................................................
..............................................................
(ii) அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ..............................................................
..............................................................

2.5. அலுவலக தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :..............................................................

2.6. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :..............................................................
..............................................................

2.7. பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):
..............................................................

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

4. ஆண்/பெண்
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக)

5.
5.1. பிறந்த திகதி :
ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | | |

5.2. 2020.03.06 ஆந் திகதிக்கு வயது:
வருடங்கள் : [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள்: [ | ]

6. கல்வித் தகைமைகள்

| தொடர் இலக்கம் | விண்ணப்பிக்கின்ற பாட இலக்கமும் பாடமும் | வர்த்தமானி அறிவித்தலின் தொடர் இலக்கம் 04(II) இன் பிரகாரம் விண்ணப்பிக்கும் பிரிவு | தகைமைகள் பற்றிய விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அடிப்படைப் பட்டம்/ பட்டப்பின் கல்வி டிப்ளோமா/பட்டப்பின் பட்டம் வேறு தகைமைகள் (பெயர்) மற்றும் வழங்கிய நிறுவனம் | செல்லுபடியாகும் திகதி | வகுப்பு/ சித்தி | பிரதான பாடங்கள் (ஆட்சேர்ப்புச் செய்யும் அறிவித்தலில் குறிப்பு 04 இன் பிரகாரம் உறுதிப்படுத்தல் வேண்டும்) |
| (1) | | | | | | |
| (2) | | | | | | |
| (3) | | | | | | |

7. பரீட்சைக்கட்டணம்.

பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை இங்கு ஒட்டுக.
(பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை வைத்துக் கொள்க)

8. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைப் பிரகாரம் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் :-.................. மற்றும் ................ திகதி கொண்ட பற்றுச்சீட்டு இதில் இணைக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையின் சட்டதிட்டங்களின் பிரகாரம் செயற்படவும், இந்தப் பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகைமையற்றவன் என வெளிப்படுத்தப்பட்டின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சை நடைபெறும் போதோ எனது அபேட்சகத் தன்மையை செல்லுபடியற்றதாக்கி அல்லது மேற்கொள்ளப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன். நான் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்பாயினும் தகைமையற்றவன் என வெளிப்படின் நான் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு உடன்படல் வேண்டும் என்பதை அறிவேன்.

திகதி :- ...................... ..........................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இங்கு கையொப்பமிட்ட................................................................ இல் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ....................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் இடப்பட்டது ☐எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி........................ ..............................................

உறுதிபடுத்துபவரின் கையொப்பம்
(பதவி முத்திரை).

பெயர் :-........................
பதவி :-........................
முகவரி :-........................
திகதி :-........................

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்:**

இவ் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/ செல்வி ........................................................................................................ என்பவர் இத்திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிக/சாதாரண அடிப்படையில் சேவையாற்றுகிறார் எனவும் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படின் அவரை சேவையில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் அறிவிக்கின்றேன்.

...................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையை இடுக)

திணைக்களம் :-.................................
திகதி........................

2-207

---

**கல்வி அமைச்சு**

திருத்தம்

இலங்கை கல்வியியலாளர் சேவையின் III ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019(II) பரீட்சை தொடர்பான விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதியினை நீடித்தல்.

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2,150 மற்றும் 2019.11.15 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை கல்வியியலாளர் சேவையின் III ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான - 2019(II) இற்கான விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2020.02.14 வரை நீடிக்கப்பட்டுள்ளது."

02-222

---

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம் - மட்டக்களப்பு**

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2020.02.21 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதிக்குள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத் தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ.சீ. ரிஸ்வான்,
நீதிவான்,

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2020.01.01.

| தொ. இல. | வழக்கிலக்கம் | வாகனப் பதிவு இல. | சான்றுப் பொருட்கள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 58442/EX/19 | EP BGV-7022 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 2 | 57807/MT/19 | EP BEU-1673 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3 | 57992/MT/19 | EP TE-5581 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4 | 58011/MT/19 | WP XP-7026 | மோட்டார் சைக்கிள்(உதிரிப்பாகத்திற்காக மட்டும்) | 01 |
| 5 | 58012/MT/19 | EP MF-3488 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்காக மட்டும்) | 01 |
| 6 | AR/279/16 | EP HF-8866 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7 | 52931/MT/18 | EP JQ-3821 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 8 | 54775/MT/18 | EP HI-4862 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 9 | 38375/MT15 | | தலைக்கவசம் | 01 |
| 10 | 47924/E/17 | | தலைக்கவசம் | 01 |
| 11 | AR/944/19 | | சிலிண்டர் | 01 |
| 12 | AR/944/19 | | அடுப்பு | 01 |
| 13 | AR/944/19 | | வெற்று பரல் | 01 |
| 14 | AR/892/19 | | வெற்று பரல் | 02 |
| 15 | 39323/PC/16 | | அரிவாள் கத்தி | 01 |
| 16 | 35664/PC/15 | | அரிவாள் கத்தி | 01 |
| 17 | 33284/PC/15 | | அரிவாள் கத்தி | 01 |
| 18 | 36687/PC/15 | | சுத்தியல் | 01 |
| 19 | 25780/PC/14 | | சுத்தியல் | 01 |
| 20 | 57877/S/19 | | சவள் | 01 |
| 21 | 58990/S/19 | | சவள் | 01 |
| 22 | 58991/S/19 | | சவள் | 01 |
| 23 | 5 8992/S/19 | | சவள் | 01 |
| 24 | 58993/S/19 | | சவள் | 01 |
| 25 | 58994/S/19 | | சவள் | 01 |
| 26 | 59000/S/19 | | சவள் | 01 |
| 27 | 59002/S/19 | | சவள் | 01 |
| 28 | 59003/S/19 | | சவள் | 01 |
| 29 | 59004/S/19 | | சவள் | 01 |
| 30 | 59119/S/19 | | சவள் | 01 |
| 31 | 59122/S/19 | | சவள் | 01 |
| 32 | 59123/S/l9 | | சவள் | 01 |
| 33 | 59005/S/19 | | தாச்சி | 01 |
| 34 | 57795/Odd/19 | | | |

02-01

---

**நீதிவான் நீதிமன்றம் - கல்முனை**

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

**பறிமுதல் செய்யப்பட்ட, அரசுடமையாக்கப்பட்ட மணல் ஏலவிற்பனை**

கல்முனை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் அரச உடமையாக்கப்பட்டதுமான மணல் எதிர்வரும் 2020.02.16 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

01. பொது மக்கள் எவரும் இந்நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை (மணல்) ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

02. பொருட்களை விலை வைத்து வாங்குவோர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

03. பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தை செலுத்தி உரிய பொருட்களை இந்நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும்.

04. சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

05. இப்பொருட்களில் எவற்றையேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப் பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

ஐ.என். ரிஸ்வான்,
நீதிவான்,

நீதிவான் நீதிமன்றம்,
கல்முனை.

| விற்பனை செய்யப்படவுள்ள பொருள் | அளவு |
|---|---|
| 1. ஆற்று மணல் | கியூப்- 12 |
| 2. வயல் மணல் | கியூப் - 60 |
| 3. கிறவல் | கியூப்- 02 |

02- 236

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்**

குணரத்ன ஹோல்டிங்ஸ் & இன்வெஸ்ட்மென்ட் (பிரைவேட்) லிமிடெட்
கம்பனி இலக்கம் & PV 1142

அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு

குணரத்ன ஹோல்டிங்ஸ் & இன்வெஸ்ட்மென்ட் ( பிரைவேட்) லிமிடெட் கம்பனியானது அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு என்ற வகையில் கம்பனியை கலைக்கவும் இலக்கம் 141/3, வொக்ஸ்ஷோல் வீதி, கொழும்பு 2 எனும் முகவரியைச் சேர்ந்த பட்டய கணக்காளாரான திரு. சுமித் ரன்வத்த அவர்களின் இக் கம்பனியின் கலைப்பாளராக 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட விஷேட மகாசபைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டு அன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 319(1) (b) பிரிவின் பிரகாரம் உறுதி செய்யப்பட்டு அறிவிக்கப்படுகின்றது.

எஸ். ரன்வத்த,
கலைப்பாளர்.

இல.141/3,
வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

2- 15/1

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்**

குணரத்ன ஹோல்டிங்ஸ் & இன்வெஸ்ட்மென்ட் (பிரைவேட்) லிமிடெட்

கம்பனி இலக்கம் PV 1142

கலைப்பாளரை நியமிப்பதற்கான அறிவித்தல்

2020ஆம்ஆண்டு சனவரி 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட இக் கம்பனியின் விஷேட மகாசபைக் கூட்டத்தில் குணரத்ன ஹோல்டிங்ஸ் & இன்வெஸ்ட்மென்ட் (பிரைவேட்) லிமிடெட் கம்பனியின் கலைப்பாளராக விஷேட பிரேரணை நிறைவேற்றப் பட்டதன் மூலம் பட்டயக் கணக்காளரான சுமித் ரன்வத்த ஆகிய நான் நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை இல. 141/ 3, வொக்ஸ்ஷோல் வீதி, கொழும்பு 2 எனும் இடத்தைச் சேர்ந்த நான் அறிவிக்கின்றேன்.

எஸ். ரன்வத்த,
கலைப்பாளர்.

இல.141/3,
வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

2- 15/2

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்**

ட்ரய்பர்க் ட்ரவல்ஸ் என்ட் டூவர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
கம்பனி இலக்கம் & PV 1139

அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு

ட்ரய்பர்க் ட்ரவல்ஸ் என்ட் டூவர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் கம்பனியானது அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு என்ற வகையில் கம்பனியை கலைக்கவும் இலக்கம் 141/3, வொக்ஸ்ஷோல் வீதி, கொழும்பு 2 முகவரியைச் சேர்ந்த பட்டய கணக்காளாரான திரு. சுமித் ரன்வத்த அவர்கள் இக் கம்பனியின் கலைப்பாளராக 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட விஷேட மகாசபைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டு அன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 319(1) (b) ஆம் பிரிவின் பிரகாரம் உறுதி செய்யப்பட்டு அறிவிக்கப்படுகின்றது.

எஸ். ரன்வத்த,
கலைப்பாளர்.

இல.141/3,
வொக்ஸ்ஷோல் வீதி,
கொழும்பு 02.

2- 16/2

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 346 (1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்**

ட்ரய்பர்க் ட்ரவல்ஸ் என்ட் டூவர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
கம்பனி இலக்கம் PV 1139

கலைப்பாளரை நியமிப்பதற்கான அறிவித்தல்

2020 ஆம் ஆண்டு சனவரி 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட இக்கம்பனியின் விஷேட மகா சபைக் கூட்டத்தில் ட்ரய்பர்க் ட்ரவல்ஸ் என்ட் டூவர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் கம்பனியின் கலைப்பாளராக விஷேட பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் மூலம் பட்டயக் கணக்காளரான சுமித் ரன்வத்த ஆகிய நான் நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை இல. 141/ 3, வொக்ஸ்ஷோல் வீதி, கொழும்பு 2 எனும் இடத்தைச் சேர்ந்த நான் அறிவிக்கின்றேன்.

எஸ். ரன்வத்த,
கலைப்பாளர்.

இல.141/3,
வொக்ஸ்ஷோல் வீதி,
கொழும்பு 02.

2- 16/1

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஒன்கொலோஜிக்கல் கென்சர் மெடிலங்கா (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00206764
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2018, நவெம்பர் 30
கிளை: 375, ஆர்.ஏ. த மெல் மாவத்தை, கொழும்பு -03
பதிவு முகவரி : 2சி, நிவந்தகம, ஜாஎல

கல்கந்தகே ஷெஹான் ஜனக
மாலிந்த,
பணிப்பாளர்.

தே.அ.அ.இல.: 199225300963

2- 43

---

**பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : சீலீடர் சிப்பிங் (பிறைவட்) லிமிட்டட்
கம்பனிப் பதிவு இல.: பீவீ 00219008
பதிவு அலுவலகம் : இல. 41, ரம்பட் ரோட், எத்துல்கோட்டே
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2020, சனவரி 02

கம்பனிச் செயலாளர்.

2- 77

---

**பகிரங்க அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : ட்ரிப்பல் ஈ (பீவீடி) எல்டிடீ
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2020, சனவரி 13
பதிவிலக்கம்: பீவீ 00219317
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : இலக்கம் 4,8 ஆவது ஒழுங்கை, ரவத்தவத்த, மொரட்டுவ

நிமேஷா விதானகே,
கம்பனிச் செயலாளர்.

2- 74

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் அறிவித்தல்.-

வெலிசர களுடாபிற்ற வீதியின் 86 ஆம் இலக்கத்தில் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள ஷேர்மன் சன்ஸ் (பிறைவட்) லிமிட்டட் (கம்பனி ) ஆனது 2007, 59(2) ஆம் பிரிவின் பிரகாரம் (கம்பனிகள் சட்டம்) அதனது அறிமுகப்படுத்திய மூலதனத்தை இலங்கை ரூபாவாக (1,000,000.000 இ.ரூ.) குறைப்பதற்கு பத்து இலட்சம் உத்தேசித்துள்ளதென அறிவித்தல் வழங்கப் படுகின்றது.

சபையின் கட்டளைப் பிரகாரம்,

ஷேர்மன் சன்ஸ் (பிறைவட்)
லிமிட்டெட்,
செயலாளர்.

2- 103

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழுள்ள பீபல்ஸ் லீசிங் ப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிட்டட் நிறுவனம், மேற்கண்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பீப்பள்ஸ் லீசிங் ப்ளீட் மேனேஜ்மன்ட் லிமிட்டட் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம்.-

கம்பனியின் முந்தைய பெயர் : பீபள்ஸ் லீசிங் ப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட இல.: பீபி 3557
பதிவு செய்யப்பட்ட அலுவலக
முகவரி : இல.1161, மருதானை வீதி, கொழும்பு 8
கம்பனியின் புதிய பெயர் : பீப்பல்ஸ் லீசிங் ப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிட்டட்

சபை கட்டளைப்படி,

எல். டீ. கோட்டேகொட,
கம்பனிச் செயலாளர்.

பீப்பள்ஸ் லீசிங் ப்ளீட் மேனேஜ்மென்ட் லிமிட்டட்,
கொழும்பு,
2020, சனவரி 17.

2- 126

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : என் டீ ஆர் இன்டர்நெஷனல் ஹோல்டிங்ஸ் ( பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00214574
பதிவு முகவரி :22/5, புரன்அப்பு ரஜ மாவத்தை,மொரட்டுவ

சபையின் கட்டளைப் பிரகாரம்,

HTP Business Services
(Private) Limited),
கம்பனிச் செயலாளர்.

2- 127

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : அக்கியோ ஹோல்டிங்ஸ் ( பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 126467
பதிவு முகவரி :இல.75/12, லியோ வீதி, சின்ஹாராமுல்ல, களனி

சபையின் கட்டளைப் பிரகாரம்,

எச் டி பி பிஸினஸ் சேர்விசஸ்
(பிறைவட்) லிமிட்டட்,
செயலாளர்.

2- 128

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : டெலிங்க் (பீவீடீ) எல்டீடி
பதிவிலக்கம்: பீவீ 00205690
பதிவு செய்யப்பட்ட முகவரி :லெவல் 5, எயிட்கன்ஸ் ஸ்கபன்ஸ் கோபுரம்1, வொக்ஷல் வீதி, கொழும்பு 2

கம்பனிச் செயலாளர்.

2- 276

---

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இல. 61,பழைய தபாலக வீதி,ஒலுவில 01,ஆதம்லெப்பை ஜென்னத் என்பவருக்கு அதே முகவரியைச் சேர்ந்த ஆதம் லெப்பை உதுமாலெப்பை என்பவரால் பிரசித்த நொத்தாரிசு ஏ. ஜே. எச். நசீம் அவர்களால் 2013. 07.08 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2527 ஆம் இலக்கமுடையதும் மட்டக்களப்பு, கிழக்கு வலயப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் 2013. 08.07 ஆந் திகதி 438 ஆம் தொடர் இலக்கத்தில் 21 ஆம் புத்தகத்தில் 61 ஆம் பக்கத்தில் பதியப்பட்டதுமான விசேட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்கின்றேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். இனி இவரால் செய்யப்படும் எந்தவொரு செயலுக்கும் நான் பொறுப்பானவர் அல்ல என்றும் அறவிக்கின்றேன்.

ஆதம்லெப்பை உதுமாலெப்பை.

2- 12

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கொழும்பு 09, பேஸ்லைன் வீதி, இலக்கம் 181/ 15 என்ற இடத்தில் வதியும் , தே. அ.அ. இல. 875031201V உடைய வீரக்கோன் முதியன்சேலாகே நொயுமி லக்மாலி ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு செல்வி சத்துரிக்கா ஸந்தமாலி வீரவர்த்தனவினால் 2019.09.01 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 58 ஐ உடைய விசேட அற்றோணித் தத்துத்துவத்தினால் கொழும்பு 09, பேஸ்லைன்

வீதி, இலக்கம் 181/ 15 என்ற இடத்தில் வதியும், தே.அ.அ.இல. 775720727V உடைய சஸ்டமி ராலலாகே நிலுக்கா தமயந்தி பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2019, நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி முதற் கொண்டு இரத்துச் செய்யப்படுவதாக இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

2-13

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 59/5, கட்டுவாப்பிட்டிய வீதி, நீர்கொழும்பில் வசிக்கும் சந்தயா டீ சில்வா அல்லது ஹலவதஹே பிரேமானி சந்தயா டீ சில்வா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்குத் தெரிவித்துக் கொள்வதாவது, தற்போது அவுஸ் திரேலியா கடவுச் சீட்டு இலக்கம் PA 7368029 கொண்ட 1B, லிஸ்பேர்ன் பாதை, பேர்விக் மெல்பேர்ன் , விக்டோரியா 3806, அவஸ்திரேலியாவில் வசிக்கும் நான், எனது அற்றோணியாக, அற்றோணித்தத்துவ இலக்கம் 2286 ஐ உடைய, சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசுமான சுதர்ஷிணி ரணதுங்க என்பவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் கம்பஹா காணிகள் பதிவகத்தில் 2018, பெப்புருவரி 14 ஆந் திகதி 1289 இலக்கம் கொண்டதும் 71 ஆவது பகுதியில் 62 ஆவது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டு, நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டிய வீதி, 59/5 என்ற இலக்கத்தில் வசிக்கும், இலக்கம் 588281698V தேசிய அடையாள அட்டையைக் கொண்ட ஹலவதஹே மேரி காந்தி ஜெஸிலியா பெரெரா என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இன்று முதல் செயலற்றதாக இரத்துச் செய்யப்படுகின்றது என்பதை இலங்கைக் குடியரசுக்கு அறியத்தருகின்றேன். மேலும் மேற்படி திகதி முதல் என் பெயரிலோ என் நிமித்தமாகவோ ஹலவதஹே மேரி காந்தி ஜெஸிலியா பெரெரா செயலாற்றுதல், கருமம் செய்தல் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு அவர் செய்யும் செயல் கருமங்களுக்கு நான் பொறுப்புதாரி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

2-104

---

### பதிவு செய்யப்பட்ட அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இந்தியாவில் கல்கட்டா- 70068, பிரின்ஸ் அன்வர் ஷா வீதி, இல. 375 எனும் இடத்தில் ஏ ஏ இன்பா புரொப்பர்டீஸ் (தனியார்) கம்பனியாகிய எமது பத்தரமுல்லை பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் இயங்குகின்ற நாளேட்டுப் புத்தக இல.12221 , இருமடித்தாள் இல. 67, தொகுதி 281 இல் ஸ்ரீ ஜைதீப் ஹல்வாசியா ( இந்திய கடவுச்சீட்டு இல. Z 4881218 உடைய) என்பவருக்கு வழங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள இந்தியாவின் கல்கட்டா நகரில் சேவை புரியும் ஆர்.என்.மைத்தி எனும் நொத்தாரிசு மூலம் திட்டமிட்டவாறு எழுதி உறுதி செய்யப்பட்ட 2019.07.23 ஆந் திகதிய இல. U 45400WB 2009PTC136476 ஐ உடைய திட்டமிடப்பட்ட வஞ்சகமான அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

பணிப்பாளர் குழு,
ஏ ஏ இன்பா புரொப்பர்டீஸ்
( தனியார்) கம்பனி.

இல. 375, பிரின்ஸ் அன்வர் ஷா வீதி,
கல்கட்டா - 70068, இந்தியா.

2-319

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, நுகேகொடை, பெங்கிரிவத்த வீதி, இல. 117/1/D எனும் முகவரியில் வசிக்கும் சந்தியாகுகே இரேஷ் வசந்த டி சில்வா (தே.அ.அ.இல. 662030724V) ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. டபிள்யூ. விஜேசூரிய என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.03.24 ஆந் திகதிய 4627 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தினால் நுகேகொடை, பெங்கிரிவத்த வீதி, இல. 111/25 எனும் முகவரியில் வசிக்கும் சந்தியாகு தினேஷ் ஹிரந்த டி சில்வா ( தே.அ.அ.இல. 722101014V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

சந்தியாகுகே இரேஷ் வசந்த டி சில்வா.

2-320

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, நுகேகொடை, பெங்கிரிவத்த வீதி, இல. 117/1/D எனும் முகவரியில் வசிக்கும் சந்தியாகுகே இரேஷ் வசந்த டி சில்வா (தே.அ.அ.இல. 662030724V) ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு கே. டபிள்யூ. விஜேசூரிய என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.03.24 ஆந் திகதிய 4626ஆம் இலக்க அற்றோணித் தத்துவத் தினால் நுகேகொடை, பெங்கிரிவத்த வீதி, இல. 111/25 எனும் முகவரியில் வசிக்கும் சந்தியாகு தினேஷ் ஹிரந்த டி சில்வா ( தே.அ.அ.இல. 722101014V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

சந்தியாகுகே இரேஷ் வசந்த டி சில்வா.

2-321

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் புத்பிட்டிய மல்வதுஹிரி பிட்டிய, இல.16 எனும் முகவரியில் வசிக்கும் குடாகளு ஆரச்சிகே ரிச்சட் பந்துல (தே.அ.அ.இல. 600581058 மற்றும் அதே முகவரியில் வசிக்கும் குடாகளு ஆரச்சிகே தம்பர தினிசுரு களுஆரச்சி (தே.அ.அ.இல. 910613618V) ஆகிய நாங்கள், கம்பஹா பிரசித்த நொத்தாரிசு எம். கே.எம். ஜே. மான்கோட்டே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011.06.04 ஆந் திகதிய 2000 ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், வெலிவேரிய, எம்பரளுவ வடக்கு, இல. 22/ 2 எனும் முகவரியில் வசிக்கும் குடாகளு ஆரச்சிகே கமலா பத்மினி (தே. அஅ.இல. 476921848V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித்தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்று முதல் எமது அற்றோணித்தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நாம் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

குடாகளு ஆரச்சிகே ரிச்சட் பந்துல,
குடாகளு ஆரச்சிகே தம்பர தினிசுரு
களுஆரச்சி.

2-339

---

### அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, நீர்கொழும்பு, மீரிகம வீதி, இல.35ஏ எனும் முகவரியில் வசிக்கும் ஷாஹுல் ஹமீட் மொஹொமட் ஷிப்லி ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு தரங்க திசாநாயக்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.04.11 ஆந் திகதிய 3188ஆம் இலக்க அற்றோணித்தத்துவத்தினால் ராஜகிரிய, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை, இல. 100/01 எனும் முகவரியில் பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி பீஎல்சீ இற்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஷாஹுல் ஹமீட் மொஹொமட்
ஷிப்லி.

2-340

---

## ஏல விற்பனைகள்

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. - ஏகலை கிளை

(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி )

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஏல விற்பனை

**விலைமதிப்புமிக்க சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்பனை**

அங்கீகாரம் பெற்ற நில அளவையாளரால் அங்கீகரிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட 1977, செத்தெம்பர் 23 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இலக்கம் KO 4428 இல் லொட் இலக்கம் 06இல் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டு இலக்கம் 562 (பகுதி) நாலையில் அமைந்துள்ள " பெத்மலகும்புர" காணி அக்காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து, சல்பிட்டி கோறளே, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட இலக்கம் 514, வெலிகட கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள லொட் இலக்கம் 06 எனும் காணியின் வடக்கெல்லை: ஓடை மூலமாகவும்; கிழக்கெல்லை: லொட் இலக்கம் 7 மூலமாகவும்; தெற்கெல்லை: லொட் இலக்கம் 2 எனக் குறிக்கப்பட்டுள்ள அணுகல் சாலை மூலமாகவும்; மேற்கெல்லை: லொட் இலக்கம் லொட் இலக்கம் 05 மற்றும் சாலை மூலமாகவும் சூழப்பட்டிருக்கும் காணியின் பரப்பளவு இருபத்தி ஒன்று தசம் நான்கு பேர்ச் ஆகும். (0ஏ.0றூ.21.4பே.)

ஆர் . டி . லியனகே என்பவரால் மேற்கூறிய சொத்து சமீபத்தில் ஆய்வு செய்யப்பட்டு 2015, யூன் மாதம் 29 ஆந் திகதியிட்ட திட்ட எண் 1694 /2015 இல் காட்டப்பட்டுள்ள கணக்கெடுப்பு
பின்வருமாறு-

லொட் இலக்கம் 06A இல் சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டு மதிப்பீட்டு இலக்கம் 562 (பகுதி) நாலையில் அமைந்துள்ள "பெத்மலகும்புர" காணி அக்காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து சல்பிட்டி கோறளே , ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 514, வெலிகட கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள லொட் இலக்கம் 06 எனும் காணியின் வடக்கெல்லை: ஓடை மூலமாகவும்; கிழக்கெ ல்லை: திட்ட எண் PP 4428 படி லொட் இலக்கம் 7 மூலமாகவும்; தெற்கெல்லை: PP KO 4428 படி லொட் இலக்கம் 02 எனக் குறிக்கப்பட்டுள்ள அணுகல் சாலை (30 அடி அகல சாலை) மூலமாகவும்; மேற்கெல்லை: PP 4428 இன்படி லொட் இலக்கம் 05 மற்றும் சாலை மூலமாகவும் சூழப்பட்டிருக்கும் காணியின் பரப்பளவு திட்ட எண் 1694- 2015 படி இருபத்தி ஒன்று தசம் நான்கு பேர்ச் ஆகும். (00ஏ.00றூ.21.4பே.)

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏகநாயக்க அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதியிடப்பட்ட 11990 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் நிஷாந்தி விநோதினி ஹதுந்நெத்திகெ என்பவரால் ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இனால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**பிரவேசம்** .-ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகராட்சி மன்ற அலுவலகத்திற்கு எதிரே இருந்து காணியை அடைய நாவல சாலையில் சுமார் 200 மீற்றர் தூரம் பயணித்து வெலிகட டெரஸ்க்கு இடதுபுறமாகத் திரும்பி சுமார் 60 மீற்றர் தூரம் சென்றால் இந்தக் காணியை உங்கள் இடது புறத்தில் காணலாம்.

**தீர்மானஅறிவிப்புகளுக்காக**.- 2019, நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியிட்ட அரசாங்க வர்த்தமானி மற்றும் 2019, நவெம்பர் மாதம் 13 அந் திகதிய "டேலி மிரர்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:** ஏல விற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர் விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சத வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையின் ஏலதாரர் தரகு 2 1/2 % (இரண்டரை வீதம்) அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்);
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் எஞ்சிய 90% விற்பனையின் பின்னால் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்காணும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.- "உதவி பொது முகாமையாளர் , அறவிடுதல், ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல.479, ரீ. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.: 011-2661816/ தொலைநகல்: 011- 2661835.

டல்லஸ் கெலாட்,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 146/3,
கல்தேரா கார்டின்ஸ்,
கீழ் துட்டுகெமுனு வீதியினூடாக,
கொஹுவல.
தொலைபேசி: 011- 4367467, 011- 4367111.
மின்னஞ்சல் : aucslk@gmail.com

2- 147

---

## பகுதி I : தொகுதி (I) - பொது

**குறிப்பு**.- மேற்படி தலைப்பின் கீழ் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களை தயவுசெய்து 2020.02.07 ஆந் திகதி பிரசுரமாகும் அரசாங்க வர்த்தமானியில் பார்க்கவும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk